சிலம்பில் தெறித்த சிலப்பு முத்துக்கள்

"ஏலே, சருக்கா வண்டியைப் பூட்டு. இப்பக் கிளம்பினாத்தான் கீரூரு மாரியம்மன் கோயிலுக்குப் பொழுது சாயரதுக்கு முன்னாடிப் போவலாம்'' என்றார் வெள்ளையத் தேவர்.

''ஏன் அண்ணாச்சி அவசரப்படுதீக. கொஞ்சம் தாமசமாட்டிரு என்ன கெட்டுப் போவுது'' என்று பதில் சொன்னான் சின்னக்குட்டி.

''என்னலே ஒன்னும் தெரியாதது மாதிரிப் பேசுதே. இன்னிக்கிக் கோயில் கொடையிலே பாப்பாரப் பாண்டியன் சிலம்பாட்டமில்லே. அயத்துப் போனியா?''

''ஆமாண்ணாச்சி. அயத்துதான் போயிட்டேன். அவுக கூட யாரு ஆடுதாகளாம்?''

''மேலக்குளம் அண்ணாவி மாரிமுத்துத் தேவரு தான் ஆடுதாக. அவரும் பாப்பாரப் பாண்டியன்ட்ட கத்துக்கிட்டவருதானாம்.''

சின்னக்குட்டி எழுந்து போய் செவத்லைக் காளையையும் வெள்ளைக் காளையையும் வண்டியில் பூட்டினான். வைக்கோல் போரிலிருந்து கொஞ்சம் வைக்கோலை உருவி வண்டிக்குக் கீழ தொங்கிக்கொண்டிருந்த சாக்குத் தூக்கிலே அடைத்தான். பளபள என்று தேய்த்து வைத்திருந்த பித்தளைப் பூணை எடுத்து மாடுகளின் கொம்புகளில் பொருத்தினான். தார்க்குச்சியைக் கையில் எடுத்துக் கொண்டான். இரண்டு நாட்களுக்கு முன்னாலேதான் புதுத் தார்க்குச்சி வாங்கியிருந்தான். அதன் முனையில் இருந்த ஆணி மிகவும் கூராக இருந்தது. கல்லிலே கொஞ்சம் மழுங்கத் தேய்த்துக் கொண்டான். மாட்டுக் கழுத்திலே கட்டியிருந்த வார்ப்பட்டையிலே சலங்கைகள் ஒலித்தன. வண்டி சவாரிக்குத் தயாராகிவிட்டது. வெள்ளையத் தேவர் வண்டியிலேறி அமர்ந்தார்.

''ட்ரியோவ்''- வண்டி கிளம்பிவிட்டது.

''சின்னக்குட்டி வண்டியை மேலத்தெரு மாயாண்டி மாமன் வீட்டிலே நிறுத்து. அவுகளும் வரேன்னுக'' என்றார் வெள்ளையத் தேவர்.

கரிசல் புழுதி காற்றில் பறக்க வண்டி விரைந்தது. பாரம் சுமந்து பழக்கப்பட்ட அந்த வண்டிக் காளைகளுக்கு வெள்ளையத் தேவரும் சின்னக்குட்டியும் ஒரு சுமையாகவே தெரியவில்லை. சிவலப்பேரி சந்தையிலே போன சித்திரையிலே பிடிச்சது. விட்டாப் போதும் நாலுகால் பாய்ச்சலிலே ஓடும். தார்க்குச்சிக்கு வேலையே இருக்காது.

மேலத்தெரு மாயாண்டித் தேவர் வீட்டு முன்னாலே வண்டி நின்றது.

சொக்கலால் ராம்சேட் பீடியை வாயில் புகைத்துக்கொண்டே வண்டியிலேறினார் மாயாண்டித் தேவர்.

''ஏலே, சின்னக்குட்டி, வண்டிக் காடியை எடுத்து வீட்டிலேயே வச்சுட்டு வந்திருக்கப்படாது- சரியா ஒக்கார முடியலியே'' என்றார் மாயாண்டி.

''திரும்பி வரயிலே வயசானவுக வாராசக்கம் வருவாக., அவகளுக்குப் பிடிமானமாக இருக்கட்டும் மேன்னுதான் காடியை எடுக்கலே'' என்றான் சின்னக்குட்டி.

வண்டி பறந்தது. இரட்டை அடிப்பாதை கரிசல் புழுதியில் படுத்துக் கிடந்தது. அதை உசுப்பிவிட்டுக் கொண்டே சென்றது வண்டி. உசுப்பிய கோபத்தில் பாதை விட்ட பெருமூச்சு புழுதி கிளப்பியது.

கீரூர் சாலையிலே வண்டி திரும்பியது. பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் வண்டிகள் கீரூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மாடுகளின் கழுத்துப் பட்டைகளின் மணியோசை சாலை அரங்கில் சங்கீதம் பாடியது.

''வெள்ளையா! இன்னிக்கி அந்த ஐயன் சலங்கை கட்டி ஆடுவாகளா?'' என்று கேட்டார் மாயாண்டி.

''அவுக சலங்கை கட்டி ஆடுவதைப் பார்க்கத் தானே இம்மாம் கூட்டம் போவுது. அவுக சலங்கை கட்டி ஆடும்போது பாத்தா பாட்டுக்குத் தாளம் போடுததுபோல இருக்கும்'' என்று தனது மனதுக்குள்ளே முன்புதான் பார்த்த சிலம்பாட்டத்தைக் கற்பனை செய்துகொண்டு பதில் சொன்னார் வெள்ளையத்தேவர்.

''இந்த ஐயன்கிட்டதானே நம்ம ஜனங்க கத்துருகளாம்.''

''ஆமாம் அம்மானு, கத்துக்குடுக்குறதுக்கு அவுக காசே வாங்கறதில்லையாம்.''

''ஆனா எல்லாப் பிடியையும் கத்துக்குடுக்கிறதில்லையாமே?''

''ஆமாம். இவனுகளெல்லாம் மொரடங்க. இவங்களுக்கு எல்லாத்தையும் கத்துக் கொடுத்தா வம்புச் சண்டைக்குப் போவானுகன்னு பாப்பாரப் பாண்டியன் சொல்லுதாகளாம்.''

''அவுக சொல்லுததும் சரிதான். ஒரு ஐயரு சிலம்பு ஆடுதாக அதுவும் அண்ணாவியா இருக்காக.

நம்மவங்களெல்லாம் அவுகவிட்ட கத்துக்கிடுதாகன்னு வேடிக்கைதான்!''

''அதுனாலே தானே அவுகளைப் பாப்பாரப் பாண்டியன்னு சொல்லுதாக.''

''ஏலே, சின்னக்குட்டி, பின்னாலே புதாரு பூலே யாப்பாண்டியன் வண்டி வருது- நம்மளை முந்தப் பாக்குறாக. விடாதலே-ஒட்டாங்காளையா நாட்டுக் காளையை செலிக்குதது. விரட்டுலே'' என்றார் மாயாண்டி. சின்னக்குட்டி எந்தனையோ விட்டலே. தாண்டி விட்டால் கேட்கவே வேண்டாம். வண்டி பறந்தது ஒட்டாங்காளை கிட்ட நெருங்க முடியவில்லை.

மாரியம்மன் கோவிலிலே கணியான் கூத்து முடிந்துதான் சிலம்பாட்டம் ஆரம்பிக்கும். கூத்துக் கதையிலே இன்னும் அம்மன் பிறக்கவில்லை. குழந்தை இல்லையென்று மன்னன் சிவபெருமானிடம் முறையிடும் கட்டம்.

''தண்ணி கேட்டு வந்தவரை-நானும்
தடியால் அடிச்சேனு
பசிக்குதுன்னு வந்தவரை-நானும்
பட்டினியாப் போட்டேனு
விருந்துக்கென்னு வந்தவரை-நானும்
வெரட்டி அடிச்சேனு
என்ன பாவம் நானும் செஞ்சேன்
ஏனெனக்குப் பிள்ளையில்லே''

பாட்டு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. வெளியூரிலிருந்து வந்தவர்களெல்லாம் முண்டியடித்துக் கொண்டு இடம்பிடித்துக் கொண்டிருந்தார்கள். அம்மன் பிறக்கப்போகிறாள். அதற்குள்ளேயே சில பேருக்கு அருள் வரத் தொடங்கிவிட்டது. உட்கார்ந்த படியே தலையை ஆட்டி ஆட்டி ஆடினார் ஒருவர். எழுந்து நின்று குதிக்கத் தொடங்கினார் ஒருவர்.

''இன்னும் அம்மன் பிறக்கலே - அதுக்குள்ளே என்ன ஆட்டம் வேண்டிகிடக்கு'' என்று கத்தினார் அம்பலம். அம்பலம் சொல்லுக்கு மருளாடிகளும் கட்டுப்பட்டார்கள். சாமியாடுபவர்களின் வேகம் குறைந்தது. பூசாரி பண்டாரம் கற்பூரத்தைத் தட்டில் வைத்துத் தயாராக நின்று கொண்டிருந்தார். கணியான் பாட்டுத் தொடர்ந்தது. கையிலே வட்டமான தாளத்தை இரண்டு பேர் தட்ட பெண்வேடம் போட்ட இரண்டு கணியான்கள் சுற்றிச் சுற்றி ஆடினார்கள். அம்மன் பிறந்து விட்டாள்.

''ஆயிபக மாரியவ
அவதாரம் செய்துவிட்டா
குழந்தைகளைக் காத்திடவே
கோமகனின் வீடுவந்தா
மக்களைக் காத்திடவே
மன்னவனின் வீடுவந்தா''

இப்படி ஒருவர் மாற்றி ஒருவராகக் கணியான்கள் பாடி ஆட, சாமியாடிகள் அருள் வந்து ஆடத் தொடங்கிவிட்டனர். பண்டாரம் கற்பூரம் காட்டினார். ஒருவழியாகப் பானகம் குடித்துச் சாமிகளெல்லாம் மலையேறிய பிறகு சிலம்பாட்டத்திற்கு ஏற்பாடு நடந்தது. சுத்தமாகப் புல் செதுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆயிரம் பேருக்குக் குறையாமல் கூட்டம். நடுவிலே சிலம்பாட்ட அரங்கத்திலே மாரிமுத்து அண்ணாவி கோஷ்டிக்கும் பாப்பாரப் பாண்டியன் கோஷ்டிக்கும் சிலம்பாட்டம் தொடங்கிவிட்டது. கம்பத்திலெல்லாம் மின்குமிழ் விளக்குகள் கட்டியிருந்தார்கள். வாழைத் தண்டு விளக்குகளைச் சுற்றிப்பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. கத்துக்குட்டிகளின் ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. அம்மன் கோவிலுக்குள் சென்று வணங்கிவிட்டு வந்து கொண்டிருந்தார் பாப்பாரப் பாண்டியன்.

கூட்டத்திலே பரபரப்பு ஏற்பட்டது. சிலம்பாட்ட அரங்கத்துக்குள் பாப்பாரப் பாண்டியன் நுழைந்து காலில் சலங்கைக் கட்டிக் கொண்டார். மாரிமுத்து அண்ணாவியும் சலங்கைக் கட்டிக் கொண்டார். அண்ணாவிகளின் ஆட்டம் தொடங்கியது.

மாரிமுத்து அண்ணாவி சிலம்பாட்டத்திலே வளைக்கப் பிடி போட்டுத் தனது வந்தனத்தைக் குருவுக்குத் தெரிவித்தார். ஆட்டம் மும்முரமாக நடை பெற்றது. ஆட்டமா அது? சிலம்பாட்டமா, தாளவாத்தியக் கச்சேரியா? சலங்கை ஓசையும் சிலம்புக் கம்புகளின் தாளமும் மக்களைக் கிறங்க வைத்தன. அடுத்தடுத்து ஆயிரம் பிரம்புகள் ஒன்றோடொன்று மோதின போல சடசடக்கும் ஒரு சமயம் - மறுகணம் அது குறைந்து வந்து நிச்சலனம் ஆகிவிடும் - சுழன்று சுழன்று அந்த வட்டத்துக்குள்ளே எல்லா இடங்களிலும் இரண்டு பேரும் தெரியும் மாதிரி எப்படி ஆட முடிந்தது என்று எல்லாரும் வியந்தார்கள். எப்படி அசைவில்லாமல் போட்டோ எடுப்பது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தார் ஒரு புகைப்படக்காரர்.

சடக்-மாரிமுத்து அண்ணாவியினுடைய கம்பு முறிந்து கீழே விழுந்தது-பாப்பாரப் பாண்டியனை அலக்காகத் தூக்கிக் கூத்தாடினார்கள். தூக்கியதில் முதல் ஆள் மாரிமுத்து அண்ணாவிதான். இப்படி ஒரு அண்ணாவியிடம் தாம் கற்றுக்கொள்ள என்ன பேறு பெற்றோம் என்பதில் அவருக்குப்பெருமை. அன்று கிட்டத்தட்ட நூறு துண்டுகளாவது பாப்பாரப்பாண்டியனுக்குக் கட்டியிருப்பார்கள். அந்தத்துண்டுகளில் நேர்த்தியான ஒரு துண்டை எடுத்து மாரிமுத்து அண்ணாவிக்கு மார்புக்குக் குறுக்காகக் கட்டி அவரை அணைத்துக்கொண்டார் பாண்டியன்.

இந்த மாதிரி வீரநிகழ்ச்சியை மீண்டும் எப்போது பார்க்கப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பை மக்களிடம் ஏற்படுத்தியது அந்தச் சிலம்பாட்டம். மாலை மரியாதையோடும் மேளதாளத்தோடும் பாப்பாரப் பாண்டியனை அவருடைய வீடுவரைக் கொண்டு விட்டுவிட்டு வந்தனர்.

வண்டிகள் பூட்டப்பட்டன. சாலையில் புழுதி பறந்தது. மறுநாள் காலை தனது வீட்டின் முன்புறம் உள்ள மல்லிகைப் பந்தலைச் சீர் செய்து கொண்டிருந்தார் பாண்டியன். அந்த நேரம் பார்த்து வீட்டிற்குள் இருவர் நுழைந்தார்கள்.

''கும்பிடறேன் சாமி'' என்றார் ஒருவர்.

''குட்மார்னிங் சார்'' என்றார் மற்றவர்.

''வா, சொரிமுத்து. வாங்க சார் - உட்காருங்க'' என்றார் பாண்டியன்.

அவரைப் பார்த்தால் முன்தினம் பாய்ந்து ஆடிய சிலம்புச் சிங்கமாகத் தோன்றவில்லை. பழுத்த சிவப்புமாகப் பட்டை பட்டையாக விபூதி அணிந்து பக்த சிரோன்மணியாக விளங்கினார். அவரது பூணூல் வெளுப்பாக இருந்தது. வியர்வைக் களிம்பேறிய அழுக்கு நிறப் பூணூல்களே அதிகம் காட்சி தரும் அந்த அக்கிரஹாரத்தில் வெள்ளைப் பூணூல் அணிந்த பாப்பாரப் பாண்டியன் ஓர் அதிசயம்தான். அவர் புறத்தூய்மைக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பது அதிலிருந்துத் தெரிந்தது.

''சார்வாள் யாரு'' என்று கேட்டார் பாண்டியன். ''ஐயா, பட்டணத்திலேருந்து வந்திருக்காக. அவுகளுக்குப் பூர்வீகம் இந்த ஊர்தான். நம்ம மாரித்தா கோவிலுக்கு அடிமைக்காரங்க. கோவில் கொடைக்காக பட்டணத்திலிருந்து வந்திருக்காக- நாளைக்குத் திரும்பப் பட்டணம் போறாக. நேத்து சாமியோட ஆட்டத்தைப் பாத்தாக-அசந்து போயிட்டாகளாம். உங்களைப் பாக்கணுமின்னாக. கூட்டியாந்தேன்'' என்றார் சொரிமுத்து.

''ஆமாம் சார்-உங்க ஆட்டம் ரொம்பப் பிரமாதம். வொண்டர்புல்-நான் இப்படிப் பார்த்ததே இல்லை.''

''ரொம்ப சந்தோஷம்..., சார்வாளுக்கு என்ன ஜோலி?''

''சார்வாள் பட்டணத்திலே சினிமாப்படம் எடுக்கிறாக- கிராமத்தை வச்சுப் படம் எடுக்கிறதிலே ஐயாவுக்கு நல்ல பேரு'' என்றார் சொரிமுத்து.

''ஆமாம், ஆமாம் - கிராமம் தான் பட்டணத்துக்குப் பேர் கொடுக்குது'' என்று சொல்லிச் சிரித்தார் பாண்டியன்.

''நாங்க கிராமத்தைப் பத்திப் படம் எடுத்து அதுக்குப் பேர் கொடுக்கிறோம்'' என்றார் வந்தவர்.

''அப்படியா? நல்லது. இப்போ ஏதாவது படம் எடுக்கிறீங்களா?''

''எடுக்கிறேன் - முழுக்க முழுக்க ஒரு கிராமத்துப் படம். கிராமத்துப் படங்கிறதாலே சண்டைக் காட்சிகள் நெறைய வச்சிருக்கேன். நேத்து உங்க சிலம்பாட்டத்தைப் பாத்ததுக்கப்புறம் இதைப் படத்திலே சேக்கணும்னு ஆசைப்படறேன்.''

''கிராமத்துக்காரங்கன்னா சண்டை போடறவங்கன்னு எப்படியோ பேர் வந்திடிச்சு. சரி இந்தச் சண்டையை எப்படிச் சேக்கப் போறீங்க?''

''கதாநாயகனுக்கு 'டூப்'பா நீங்க சண்டை போடணும்.''

''மன்னிக்கணும்- 'டூப்'பா சண்டை போடறதெல்லாம் எனக்குத் தெரியாது. அதுமிட்டுமில்லே- ஒரே சமயத்திலே பத்துப் பேரை அடிக்கறமாதிரிக் காட்டி ஏமாத்து வேலை பண்றதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''பத்தாயிரம் ரூபாய் பணம் தாரேன். இந்தக் கிராமத்திலேயே வந்து படம் எடுக்கிறேன்.''

''என்னுடைய கலையை நான் பணத்துக்கு விக்கிறதில்லே.''

''நல்லா யோசனை பண்ணிச் சொல்லுங்க.''

''இதிலே யோசனை செய்யறதுக்கே ஒண்ணுமில்லே.''

''நீங்க இருக்கும்போது உங்க சிஷ்யர்களைக் கூப்பிட்டா நல்லாயிருக்காது.''

''அவங்க சம்மதிச்சா தாராளமாக் கூப்பிட்டுக்குங்க.''

''நீங்க நடிக்க வேண்டாம். ஸ்டண்டு மாஸ்டராகவாவது இருக்கலாமில்லையா?''

''நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே. என் கலையை விக்கப் போறதில்லேன்னு.''

''சரி, அப்போ நான் வரேங்க - எப்பவாவது உங்க மனசு மாறினா சொரிமுத்துத் தேவர் மூலமாச் சொல்லி அனுப்புங்க.''

''அதுக்கு அவசியம் வராதுன்னு நினைக்கிறேன்.'' வந்தவர்கள் இருவரும் சென்று விட்டார்கள்.

2

முதல்நாள் நடந்த பாராட்டெல்லாம் கூட பாப்பாரப்பாண்டியனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. பாதுகாப்புக்காகப் பயன்படுத்த வேண்டிய கலையைத் தாக்குதலுக்காகப் பயன்படுத்துவது அவருக்குப் பிடிக்காத ஒன்று. கற்றுக்கொடுக்கிறவரை சாதுவாகத் தெரிந்த பல பேர்கள் கற்றுக்கொண்ட பிறகு முரடர்களாக மாறிவிட்டார்கள். அவரிடம் அவர்கள் மரியாதையாக நடந்துகொண்டாலும் முரடர்கள் முரடர்கள்தானே! சிந்தனையில் அமர்ந்திருந்த பாப்பாரப்பாண்டியனின் கவனத்தை ''சாமியோவ்'' என்ற அவலக் குரல் கலைத்தது. வீட்டின் பின் புறத்திலிருந்து குரல் வந்தது. எழுந்து போய்ப் பார்த்தார்.

நீர் பாய்ச்சிக் குடும்பனின் தம்பி கருப்பன் நின்று கொண்டிருந்தான்.

''சாமீ, எங்க அண்ணாச்சியை வடக்கூருப் பாண்டியங்க அடிச்சுப் போட்டுட்டாங்க.''

''ஏண்டா அடிச்சாங்க.''

''அவங்க வயலுக்கு முதல்லே தண்ணி பாய்ச்சணும்னு சொன்னாக. அண்ணாச்சி முறைப்படிதான் விடுவேன்னாக. அதுனாலேதான்..''

''அவங்க இன்னும் அங்கே இருக்காங்களா?''

''இருக்காக சாமி.''

''எந்த இடத்திலே?''

''மடைப்பக்கத்திலே.''

''சரி, நீ போ நான் வரேன்.''

பாப்பாரப் பாண்டியன் கையில் சிலம்புக் கம்பை எடுத்துக்கொண்டு விரைந்தார். அவருடைய தலையைப் பார்த்த உடனேயே மாடனை அடித்தவர்கள் ஓடிவிட்டார்கள். மாடனின் தலையில் சரியான அடி. தோள் பட்டைக்குக் கீழே காயம்பட்டிருந்தது. ரத்தம் கொட்டி உறைந்து கிடந்தது. மயங்கிய நிலையில் இருந்த மாடனைக் கருப்பனும் பாண்டியனும் சேர்ந்துத் தூக்கிக்கொண்டு போய்க் கண்மாய்க் கரையில் படுக்க வைத்தார்கள். தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்ததும் மாடனுக்கு மயக்கம் தெளிந்தது. பாப்பாரப் பாண்டியன் பக்கத்தில் நிற்பதைப் பார்த்ததும் அலறி அடித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றான்.

''எழுந்திருக்காதே... அப்படியே படுத்திரு'' என்றார் பாண்டியன்.

''சாமி, என்னை அடிச்சுப் போட்டாக சாமி.''

''அடிச்சவங்க பேரு தெரியுமா?''

''சொன்ன முத்துத் தேவரு வயலை விலைக்கு வாங்கியிருக்காகளே, அவுக சாமி.''

''ஓ.. அவங்க இந்தப் பக்கத்துக்குப் புதுசு.. நம்ம கிராம வழமை அவங்களுக்குத் தெரியாது போலிருக்கு.. சரி நான் பாத்துக்கறேன்.''

''சாமி. உங்க மேலே ஒரே ரத்தமா ஆயிட்டுதே.''

''டே. மாடா, காலையிலே குளிச்சுட்டு விபூதி பூசினேன். இப்போ குங்குமம் பூசிக்கிட்டேன்...'' என்றார் பாண்டியன்.

மாடன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''கருப்பா, ஆண்டி ரூப்பனுகிட்டப்போய் நான் வண்டி பூட்டியாரச் சொன்னேன்னு சொல்லிக் கூட்டியா.''

''சரி சாமி!''

''மாடா. அவங்கதான் அடிச்சாங்கன்னு, நீ அடி வாங்கிக்கிட்டா இருந்தே?''

''நா அவுகளைத் திருப்பி அடிக்க முடியுமா சாமி?''

''ஏண்டா முடியாது?''

''ஊருக்காரக சும்மா விடுவாகளா?''

''பாதுகாப்புக்காக யாரும் யாரையும் அடிக்கலாம்.''

''அவுகளுக்குச் சிலம்பாட்டம் தெரியும். எனக்குத் தெரியாதே சாமி.''

''ஆமாண்டா, ஒங்களையெல்லாம் பாதுகாப்பு இல்லாதவங்களாத்தான் இந்த ஊருக்காரங்க வச்சிருக்காங்க.. டே மாடா, ஒனக்கு நானே சிலம்பு கத்துத் தாரேண்டா.''

''சாமி, வேண்டாங்க.''

''ஏண்டா?''

''ஊர்க்காரங்க ஒங்க மேலே குத்தம் சொல்லுவாக.''

''என்னைப் பத்திக் குத்தம் சொல்ல இனிமேல் தான் யாராவது பொறக்கணும். மாடா, உன் காயமெல்லாம் ஆறின பிறகு உனக்குத் தினசரி சாயங்காலம் தானே கம்மாக்கரைக் களத்து மேட்டிலே கத்துத்தாரேன். ஆனா ஒரு கண்டிஷன்!''

''சொல்லுக சாமி.''

'தஞ்சையிலே ஒரு முதல்தர முதல்வர்'

டாக்டர் மா. வரதராஜன்

1978-ஆம் ஆண்டு திருக்கோவிலூரில் நடைபெற்ற தொழுநோய்த் தடுப்பு மருத்துவமனைத் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் கலந்து கொண்டார். அப்போது அவர் சொன்னார்;

"இந்த மாவட்டத்தில் பணியாற்றும் ஒரு மருத்துவ அதிகாரி மீது சரமாரியான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. மருத்துவத் துறை ஊழியர்கள் சரியாகக் காலை ஏழு மணிக்கு வேலைக்கு வரவேண்டும். ஒழுங்காக வேலை செய்ய வேண்டும். லஞ்சம் வாங்கக் கூடாது. சிகிச்சைக்கு உபயோகிக்கும் ஆயுதங்களை வெந்நீரில் போட்டுச் சுத்தம் செய்யவேண்டும் என்றெல்லாம் கண்டிப்பாக உத்தரவு போடுகிறாராம். அவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.

"இங்கே நீங்கள் எனக்கு ஒரு தஞ்சாவூர்த் தட்டு கொடுத்தீர்கள்; அதை நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் கண்டிப்பான அதிகாரிக்கு இந்தத் தட்டைக் கொடுப்பதன் மூலம் அவர் செய்கிற பணி சரி என்பதற்கு ஆதாரமாக இது இருக்க வேண்டும் என்று தட்டை அவருக்கு அளிக்கிறேன்."

இப்படித் தமிழக முதல்வரால் பாராட்டப் பெற்றவர்தாம் அன்றைய தென் ஆர்க்காடு மாவட்ட மருத்துவ அதிகாரியும் இன்றைய தஞ்சை மருத்துக் கல்லூரி முதல்வருமான செல்வி இ. எம். சரஸ்வதி அவர்கள்.

ஏகாம்பரம் மதுரமுத்து என்ற இராணுவ அதிகாரியின் புதல்வியாகிய இவர் பெங்களூரில் இண்டர்மீடியட் வரையில் படித்து விட்டு, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் பட்டம் பெற்றார். கொடைக்கானல், கோவை முதலிய ஊர்களில் பணியாற்றிய இவர் லக்னோவில் பயிற்சி பெற்று இராணுவத்திலும் பணியாற்றியிருக்கிறார். வடக்குப் பகுதியில் இவர் மிகவும் தீரத்துடன் பணியாற்றியதை இப்போது கூட நினைவு கூர்ந்து பெருமைப்படுகிறார். மிகுந்த தைரியசாலியான இவரது மனத்தைப் பாதித்தது இராக்கில் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தனது சகோதரர் பாலம் இடிந்து விழுந்ததால் மரணமடைந்ததே.

இராணுவத்தில் பணிபுரிந்ததன் எதிரொலியோ என்னவோ, கடமையில் ரொம்பவும் கண்டிப்பானவர், நிர்வாக இயந்திரம் சீராக இயங்க —

"நான் கத்துக் கொடுக்கறதை நீ உன் பாது காப்புக்காகவும் சரியான புள்ளைகளுக்குக் கத்துக் கொடுக்கறதுக்காகவும் கொடை—இந்த மாதிரிச் சமயங்களிலே வீர விளையாட்டுக்காகவும் மத்தவங்களைக் காப்பாத்தறதுக்காகவும் மட்டுமே உபயோகப் படுத்தலாம். நீயாப் போய் யாரையும் தாக்கப் படாது. அதை விலை பேசப்படாது."

"சத்தியமா நீங்க சொல்றபடியே செய்யறேன் சாமி.".

ஆண்டி மூப்பனுரின் வண்டி கம்மாக்கரை பாசன வாய்க்கால் பக்கத்திலே வந்து நின்றது. கைத்தாங்கலாக மாட்டை வண்டிக்கு அழைத்துச் சென்று வண்டியில் ஏற்றினார் பாண்டியன்.

"ஆண்டி, இவனை அவன் வீட்டிலே விட்டுடு"

"சரி சாமி,"

வண்டி கிளம்பியது.

பாண்டியன் மேற்கு வயல் கிணத்திலே குளித்து விட்டு வீட்டை நோக்கி நடந்தார். வீட்டிலே அவருக்காக யாரோ வந்து காத்துக் கொண்டிருந்தார். பரப் பரப் பாண்டியன் உள்ளே நுழைந்தார்.

"சீனு என்னைத் தெரியுதோ?" என்றார் புதியவர்.

"என் பெயரையே நான் மறந்து போயிட்டேன். அதைச் சொல்லிக் கூப்பிடறதுன்னு ரொம்ப.... ஆங்.... சொல்லிடறேன்.. ராமசந்திரன்தானே!"

"அமாம் சீனு. பார்த்து முப்பது வருஷங்களுக்கு மேலாகுதே."

"கண்ணாடி. வழுக்கைத்தலை, பாண்ட், சர்ட்- இதனாலேதான் உடனே அடையாளம் கண்டுபிடிக்க முடியலே- ஏண்டா ராமசந்திரா, அந்த நாளிலே நாம ஸ்கூல்லே ஒண்ணாப் படிச்சதை மறக்க முடியுமா? அப்போ நீ முரடன். நான் சாது. இப்போ நான் முரடன், நீ சாதுன்னு நினைக்கிறேன்."

"சீனு, அந்தக் காலத்திலே நாவல் மரத்திலே ஏறி நான் பழம் உலுக்குவேன் - நீ பொறுக்குவே- ஞாபகம் இருக்கா?"

"மறக்க முடியுமாடா? அந்த நாவல் மரத்தை வெள்ளாம் வெட்டிப் போட்டு அங்கே கட்டடம் கட்டிட்டாங்க. ராமசந்திரா, இப்போ என்ன வேலை செய்யறே?"

"ஏதோ கவர்மெண்ட் உத்தியோகத்திலே இருக்கேன்."

"எந்த ஊரிலே?"

"திருநெல்வேலியிலே."

"உட்கார்ந்து செய்யற வேலையிலேதான் நீ இருக்கணும்னு நான் நெனைச்சேன். அதுதான் கண்ணாடி, வழுக்கை... என்னைப்பாரு-இன்னும் கண்ணாடி போடலே முடி உதிரலே-நோய்நொடி இல்லாம இருக்கேன். ஏன் தெரியுமா? இந்தக்கம்புதான் காரணம்."

"உன்னைப்பத்தி ரொம்பக் கேள்விப் பட்டிருக்கேன். இந்தப் பக்கத்திலே உனக்கு ஏகப்பட்ட மதிப் பாமே!"

"எல்லாம் குருநாதர் அருள். அவ்வளவுதான். சரி. இந்த வேஷ்டியைக் கட்டிக்கோ. சாப்பிடலாம்."

இருவரும் சாப்பிடுவதற்காக அமர்ந்தார்கள்.

"சீனு. அந்தக் காலத்திலே, கண்டங்கத்திரிக்காய் பறிச்சுண்டு வர செவக்காட்டுக்குப் போவோமே ஞாபகமிருக்கா?"

"ஏன் இல்லே... அந்தக் காயை முள்ளைக்களைஞ்சு உடைச்சு விதைநீக்கி பாட்டி பொரிச்ச குழம்பு வெச்சுக் குடுப்பா.... அது எப்படி இருக்கும் தெரியுமா? அதைச் சாப்பிட்டா கபம் அண்டுமா? இருமல் இருக்குமா? ஹூம் எல்லாம் அந்தக்காலம். இப்பவும்தான் கண்டங்கத்திரிக்காய் கிடைக்குது. யார் பறிக்கிறா.. பழுத்து மஞ்ச மஞ்சளாத்தொங்குது."

"செவக்காட்டுப் பக்கம் போகணும்னு ஆசையா இருக்கு சீனு."

"அப்புறமாப் போகலாமே... இன்னும் பழைய மாதிரியேதான் இருக்கு. செவக்காட்டுப் பக்கத்திலே இருக்கிற குன்றிலே ஏதோ கன்னும்புக் கல்லிருக்காம்

வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்.

முன்பெல்லாம் தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவமனையைப் பார்த்தால் சத்திரம் சாவடி போல் ஒரே சந்தைக் கூட்டமாக இருக்கும். எங்கு பார்த்தாலும் கழிவுப் பொருள்கள் மேடிட்டுக் கிடக்கும். சகிக்க முடியாத துர்நாற்றம் வீசும். இப்போது போய்ப் பாருங்கள். மருத்துவமனையின் எல்லா நுழைவாயில்களும் மூடப்பட்டு, ஒரு வழியில் மட்டும் அதுவும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் பார்வையாளர்கள் போய் வரும்படி செய்திருக்கிறார். ஆர். எம். மருத்துவமனையும் கல்லூரி மருத்துவமனையும் ரொம்பவும் சுத்தமாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஊழியர்களும் கட்டாயக் கடமையுணர்வுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

சரஸ்வதிக்குப் பரதநாட்டியம், வீணை முதலிய லலித கலைகளோடு டென்னிஸ், பாட்மின்டன், கோல்ப் போன்ற விளையாட்டுக்களிலும் தேர்ச்சி உண்டு. குதிரைச் சவாரியிலும் நீச்சல் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றவர். நன்கு விமானம் ஓட்டுவார்.

அன்னை இந்திராவின் தஞ்சை விஜயத்தின் போது சரஸ்வதியை அவருக்கு அறிமுகப்படுத்தி, திறவாசகத்திறனை எடுத்துச் சொன்னார்கள். பாரதப் பிரதமர் மகிழ்வோடு தம் பாராட்டைத் தெரிவித்தார். ●

சிமெண்ட் பாக்டரி வைக்கலாம்னு யாரோ வந்து பார்த்தார். . பாக்டரி வந்தா ஒரு வேளை அந்த இடமெல்லாம் மாறிப் போகலாம்.''

இருவரும் சாப்பிட்டுவிட்டுக் கூடத்து ஊஞ்சலிலே அமர்ந்து வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ''சார்'' என்ற குரல் வாசல் பக்கம் கேட்டது.

''இராமசந்திரா. கொஞ்சம் ஊஞ்சல்லே படுத்துண்டு ரெஸ்ட் எடுத்துக்கோ'' என்று சொல்லிக்கொண்டே பாண்டியன் வாசலுக்கு வந்தார். வாசலில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் நின்று கொண்டிருந்தார்.

''சார். பாப்பாரப் பாண்டியன் இருக்காகளா?''

''நான்தான். என்ன வேணும்னு சொல்லுங்க.''

''நீங்க பாப்பாரப் பாண்டியன் தானு?''

''இதிலென்ன சந்தேகம்?''

''பாண்டியன்னு மீசை இருக்குமே-மீசை இல்லியேன்னு பார்த்தேன்.''

''நான் மீசை இல்லாப் பாண்டியன் - என்ன வேணும்?''

''உங்களைக் கையோட ஸ்டேஷனுக்குக் கூட்டி வரும்படி சப்இன்ஸ்பெக்டர் எஜமான் சொன்னாக.''

''எதுக்காக?''

''புதுக்குளம் பண்ணையிலே நேத்துத் திருட்டுப் போயிட்டுதாம். உங்களைக் கேட்டா யாரு திருடியிருப்பாங்கன்னு தெரியலாம்னு சொன்னாக.''

''அப்படியா. திருட்டுக்கு நான் உடந்தைன்னு சந்தேகப்படறாரோ?''

''அப்படி இல்லீங்க.. நீங்க உதவி செஞ்சீங்கன்னு கண்டுபிடிக்க முடியும்னு சொன்னாக.''

''நீங்க ஊருக்குப் புதுசோ?''

''ஆமாம்''

''உங்க சப்இன்ஸ்பெக்டர்.''

''அவரும் புதுசு. போன வாரந்தான் திருநெல்வேலியிலிருந்து வந்தாக.''

''புதுசாத்தான் இருக்கும்னு நெனைச்சேன். இது தான் உதவி கேக்கற முறையோ?''

''என்ன சொன்னீங்க?''

''என்னுடைய உதவி உங்களுக்கு வேணுமின்னு உங்க எஜமான் என்னைத் தேடி என் வீட்டுக்கு வரணும்.''

''அவரு சப்இன்ஸ்பெக்டர் எஜமான்.''

''நான் அவருக்கு மேலே எஜமான்.''

''வரப் போறீங்களா இல்லியா?''

''வர முடியாதுன்னு போய்ச் சொல்லுங்க.''

பேசிக்கொண்டிருந்த கான்ஸ்டபிள் விரைப்பாக திடீரென சல்யூட் அடித்துக்கொண்டு நின்றார். ஏனிந்த மாற்றம் என்று பாண்டியனுக்குப் புரியவில்லை. அவருக்குப் பின்னாலே ராமசந்திரன் நின்று கொண்டிருந்தார். ராமசந்திரனைப்பார்த்துதான்கான்ஸ்டபிள் திடீரென்று தன் நினைவு சல்யூட் அடித்தபடி நின்றார். வந்தவராக,

''எஜமான் நீங்க....?'' என்றார் கான்ஸ்டபிள்.

''கான்ஸ்டபிள் என்ன விஷயம்?'' என்றார் ராமசந்திரன்.

''ஜானைக் கூட்டிக்கிட்டு வரச்சொல்லி சப்-இன்ஸ்பெக்டர் எஜமான் சொன்னாக.... நான்வரேன் எஜ எஜமான். கலெக்டர் ஐயா வந்திருக்காகன்னு மான்டே சொல்லி வரச் சொல்றேன்'' என்று சொல்லிக்கொண்டே சைக்கிளை நோக்கி விரைந்தார் கான்ஸ்டபிள்.

''ராமசந்திரா வா. உள்ளே போகலாம்..'' என்றார் பாண்டியன்.

''சீனு, நான் திருநெல்வேலியிலே கலெக்டரா இருக்கேன்.''

''அதுதான் கான்ஸ்டபிள் சொன்னாரே''

தான் கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறோம் என்ற விஷயம் தெரிந்த பின்னாலே சீனு வியப்படைவார் என்று எதிர்பார்த்த ராமசந்திரனுக்கு அந்த விஷயத்தைச் சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்ட

சீனுவின் போக்கு வியப்பளித்தது. இதை வெளிப்படையாகவே சீனு, "நான் கலெக்டர் என்ற பதவிப் பந்தாவை வெளிக்காட்ட விரும்பறதில்லே. அதனாலே பல இடங்களில் நான் கலெக்டர் என்றே சொல்லதில்லே. ஆனாப் பின்னாலே நான் கலெக்டர் என்று தெரிஞ்சப்புறம் சிலபேருக்குக் காலும் ஓடாது, கையும் ஓடாது. நாம் ஏதாவது தப்பாய்ப் பேசிவிட்டோமோன்னு பலபேர் பதறுவார்கள். ஆனா நான் கலெக்டர்னு தெரிஞ்சும் சர்வசாதாரணமா நடந்துகொண்ட முதல் ஆள் நீதாம்பா; இதுதான் எனக்கு ஆச்சர்யமா இருக்கு" என்றார் ராமசந்திரன்.

"ராமசந்திரா, உன்னாலே ஏதாவது ஆதாயம் தேடணும்னு நெனைச்சா நீ கலெக்டர்னு தெரிஞ்சப்புறம் உடனே ஆச்சரியப்பட்டிருப்பேன். எப்படியும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று யோசனை பண்ணி குறைஞ்ச பட்சம் ஆச்சர்யப் படறமாதிரியாவது காட்டியிருப்பேன். பெரிய உத்தியோகத்திலே இருக்கறவனைப் பார்த்து இப்போல்லாம் பரிதாபப்படவேண்டியிருக்கு. படிச்சவன் இவனுக்குச் சல்யூட் போடறான். இவன் படிக்காதவங்க பல பேருக்கு சல்யூட் போடறான்."

நீ என்னுடைய சிநேகிதன்- சிநேகிதன் என்ற பதவியைவிட கலெக்டர் பதவி ஒன்றும் பெரிசில்லே" என்றார் பாண்டியன்.

"சீனு, உண்மையிலேயே நீ பெரியவன்தான். உன்னைப்போல என்னாலே நிச்சயமா இருக்க முடியாது. எனக்கு ஒரு சந்தேகம்?"

"என்ன சந்தேகம்?"

"நாம சின்ன வயசிலே ஆத்தங்கரைக்குக் குளிக்கப் போகிறபோது தண்ணியிலே இறங்கவே பயப்படுவே. செவக்காட்டுக்குப் போகிறப்போ வழியிலே னரி ஓடறதைக் கண்டாக்கூடப் பயப்படுவே. அப்படிப்பட்ட நீ எப்படி இந்தப் பக்கத்திலேயே பெரிய அண்ணனயா இருக்கே?"

"எல்லாம் என் குரு போட்ட பிச்சை. நான் எஸ்.எஸ்.எல்.சி. யிலே பெயிலாயிட்டேன். அது உனக்குத் தெரியாது. அந்த நேரத்திலே உங்கப்பா மதுரைக்கு ட்ரான்ஸ்பர் ஆனதனாலே நீயும் போயிட்டே. பெயிலாயிட்டதுக்காக அப்பா ரொம்பவும் சத்தம் போட்டார். நான் கோவிச்சுகிட்டு வீட்டைவிட்டு வெளியே போய் பல இடங்களிலே திரிஞ்சு குத்தாலம் போனேன். அப்போ என் காதுலே புஷ்பராகக் கடுக்கன் போட்டிருந்தேன். குத்தாலத்திலே ஐந்தருவிலே குளிச்சிட்டுத் திரும்பி நடந்துவரும்போது இரண்டு பேரு என்னைத் துரத்தினாங்க. நான் ஓடினேன். கொஞ்ச நேரங் கழிச்சு ஓட முடியாமக் கீழே விழுந்தேன். பயத்திலே கூச்சல் போட்டேன். அப்போ எங்கிருந்தோ தாடியும் மீசையுமா, கோவணாண்டியா, கையிலே ஒரு தடியை வச்சிண்டு ஒருத்தர் வந்தார். அவர் வந்ததுதான் தெரியும். அவர் என்ன பண்ணினார்னு தெரியாது. என்னைத் துரத்தின ரெண்டு பேரும் தலைதெறிக்க ஓடினார்கள். என்னைத் தொட்டு மெதுவாகத் தூக்கினார். அவர் என்னைத் தொட்ட உடனே எனக்குப் பயம் தெளிஞ்சு போச்சு. எழுந்து உட்கார்ந்தேன். "தம்பி, நீ இங்கே வந்து விழுவேன்னு எனக்குத் தெரியும்'னு சொன்னார் அவர். அவருக்கு எப்படித் தெரியும்னு எனக்குத் தெரியாது. தன்கூட நடந்துவரச் சொன்னார். போனேன். காட்டுக்குள்ளே ஒத்தையடித் தடத்து வழியே கூட்டிக்கொண்டு போனார். அங்கே சின்ன குகை மாதிரி ஓர் இடம். அதுக்குள்ளே போனார். நானும் போனேன். அவர்தான் எனக்குச் சிலம்பாட்டம் கத்துக்கொடுத்தார். என்னுடைய பாதுகாப்புக்காகவும், வீர விளையாட்டுக்காகவும், மத்தவங்களைக் காப்பாத்தறதுக்காகவும், சத்துக் குடுக்குறதுக்காகவும் மட்டுமே நான் சிலம்பைப் பயன்படுத்தலாம்னு சொன்னார். எனக்குக் கத்துக்கொடுத்த பிறகு ஒருநாள் என்னைக் கூப்பிட்டு, "ஐநந்தே, அதோ அங்கே ஒரு ஆவாரஞ்செடி தெரியுதே, அதுக்குக் கீழே ஒரு புதையல் இருக்கு. நாளைக்குத் தோண்டி எடுத்துக்கோன்'னு சொன்னார். அன்னிக்கு ராத்திரியே எங்கோ போயிட்டார். மறுநாள் காலையிலே அந்த ஆவாரஞ் செடிக்கடியிலே தோண்டிப் பார்த்தேன். அங்கே ஒரு ட்ரங்க் பெட்டி இருந்தது. அந்தப் பெட்டியைத் திறந்தா உள்ளே பூரா ஓலைச்சுவடிகள். அந்த ஓலைச்சுவடியிலே நான் கத்துக்காத பல சிலம்புப் பிடிகளெல்லாம் படம் போட்டுக் காட்டப்பட்டிருந்தன. அதை எடுத்துண்டு இங்கே வந்து அதையெல்லாம் ஆடிப் பழகினேன். என் பூஜையறையிலே இன்னிக்கும் அந்த ஓலைச்சுவடிகளெல்லாம் இருக்கு" என்று சொல்லும்போதே பாண்டியனின் கண்களில் கண்ணீர் கசிந்தது.

பாண்டியன் ராமசந்திரனை அழைத்துக்கொண்டு பூஜையறையிலிருந்த அந்தச் சுவடிகளைக் காட்டினார்.

"ராமசந்திரா, இந்த வட்டாரத்திலே இப்போ சிலம்பாட்டம் ஆடறவங்க அநேகமா என்கிட்டக் கத்துக்கொண்டவங்கதான். என்னுடைய சீடர்கள் அண்ணாவிகளாயிருந்து கத்துக் கொடுக்கிறாங்க. நான் யாருகிட்டேயும் பணம் வாங்கறதில்லே. அப்பா வச்சுட்டுப்போன நிலம் இருக்கு. வயிறு வாடாமச் சாப்பிடறேன். ஒரே ஒரு பையன் இருக்கான். அவன் திருநெல்வேலி இந்து காலேஜிலே படிக்கிறான். என் சீடர்கள் அநேகமாக என் வார்த்தையை மீறுவதில்லை. அப்பப்போ சிலபேரு கொஞ்சம் முரட்டுத்தனத்தைக் காட்டுவாங்க.." என்றார் பாண்டியன்.

"ஆச்சர்யமா இருக்கே.. உன் குரு இப்ப எங்கே இருக்கார்?" என்றார் ராமசந்திரன்.

"தெரியாது"

"அவர் பேர் என்ன?"

"அவருக்கே தெரியாது."

"ஊரு?"

"பேரே தெரியாத போது ஊரு தெரியுமா?"

"என்ன புதிரா இருக்கு?"

"அவரே ஒரு புதிர்தான். எங்கிருந்து வந்தார் என்பதும் தெரியாது - எங்கே போனார் என்பதும் தெரியாது... சரி கொஞ்ச நேரம் ஊஞ்சல்லே படுத்துண்டு தூங்கு. சாயங்காலம் செவக்காட்டுப் பக்கமாப் போகலாம்" என்றார் பாண்டியன்.

ராமசந்திரன் ஊஞ்சலில் சற்றுநேரம் கண்ணயர்ந்தார். அரைமணி நேரம் ஆகியிருக்கும். வாசலில் முன்னாலே வந்திருந்த கான்ஸ்டபிள் வந்திருந்தார். அவருடன் சப்-இன்ஸ்பெக்டரும் வந்திருந்தார். திண்ணையில் உட்கார்ந்திருந்த பாப்பாரப் பாண்டியனுக்கு இருவருமே சல்யூட் அடித்தார்கள். பாண்டியன் அவர்களை உட்காரச் சொன்னார்.

"கலெக்டர் ஐயா வந்திருக்காகளாமே" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்."

"இருக்காகளா?"

"தூங்கறாரு, எழுப்பட்டுமா?"

"வேண்டாம் தூங்கட்டும் உங்களைப் பத்திச் சரியாத் தெரிஞ்சுக்காம உங்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச்சொல்லிட்டேன். மன்னிச்சுக்கணும்" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"பரவாயில்லே. புதுக்குளம் ஜமீன்தார் வீட்டிலே யாரு திருடினாங்கன்னு தெரியுமா?"

"தெரியாதுங்களே?"

"உண்மையிலேயே திருட்டு நடந்திருக்கா?"

"அப்படித்தான் கம்ப்ளெய்ண்ட் கொடுத்திருக்காரு."

"என்னென்ன பொருள் போயிருக்காம்?"

"ஒரு பம்ப் செட், ஒரு சைக்கிள், 20 அடி பைப், இன்னும் கொஞ்சம் சில்லறை சாமான்கள்."

"இதெல்லாம் அவருடைய சாமான்கள்தானா?"

"அப்படித்தான் இருக்கணும்."

"அப்படி இருக்கணும்னு அவசியமா என்ன?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"பொருளுக்குச் சொந்தக்காரன் எடுத்துக்கிட்டுப் போயிருக்கலாமில்லையா?"

"அப்படின்னு பண்ணையார் அவங்ககிட்டயிருந்து பொருளைப் பறிச்சு வச்சிருந்தாரா?"

"அவங்களுக்குத் தெரியாம இருக்கு வச்சிருக்கலாமே?"

"அப்படியும் இருக்குமா?"

"விசாரிச்சுப் பாருங்க. உங்களுக்கு உதவி செய்யறதுக்காக ஒன்னு சொல்றேன். நீங்க திரும்பிப் போகும் போது கிழக்கும் புதுக்குளத்துக்கும் இடையிலே இருக்கும் இரட்டை ஆலமரத்துப் பக்கத்திலே உள்ள தோட்டத்திலே சண்முகத் தேவர் தண்ணீர் இறைச்சுக்கிட்டிருப்பார். அவரைப் பார்த்து அவரோட பம்ப்செட்டு என்ன ஆச்சுன்னு கேளுங்க. உங்க பிரச்னைக்கு விடை கிடைக்கும். ஆனா ஒண்ணு, யாருக்கும் பயப்படாம நியாயமா ஒரு முடிவுக்கு வாங்க."

"ரொம்ப நன்றி சார்" என்றார் சப்-இன்ஸ்பெக்டர். சற்றைக்கெல்லாம் ராமசந்திரன் எழுந்து வந்தார். சப்-இன்ஸ்பெக்டர் எழுந்து நின்று சல்யூட் அடித்தார்.

"சார், இன்னும் எத்தனை நாள் இங்கே....?"

"சப்-இன்ஸ்பெக்டர், நான் இங்கே என் நண்பரைப் பார்க்க வந்திருக்கேன். அதனாலே எந்த பந்தாவும் வேண்டாம்" என்றார் ராமசந்திரன்.

"போலீஸ் பந்தோபஸ்து ஏதாவது....?"

"வேண்டாம். இதோ, இருக்காரே இவரை விடவா எனக்கு வேறு பந்தோபஸ்து வேணும்!" என்றார் ராமசந்திரன்.

சப்-இன்ஸ்பெக்டர் சல்யூட் அடித்துவிட்டு நகர்ந்தார். நண்பர்கள் இருவரும் செவக்காட்டுக்குச் செல்லத் தயாரானார்கள்.

அதற்குள்ளே மீண்டும் வாசலில் ஒரு கூட்டம்.

"அண்ணாவி..."

பாப்பாரப் பாண்டியன் வெளியே வந்து பார்த்தார்.

"அண்ணாவி, நம்ம நீர்ப்பாய்ச்சியைக் காலையிலே அடிச்சவங்களைப் பிடிச்சுக் கொண்டாந்திருக்கோம். காலையிலே அண்ணாவி அங்கே போலேயளா யில்லே" என்றார் சுந்தரத் தேவர்.

நீர்ப்பாய்ச்சியை அடித்த அந்த முரடர்கள் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தார்கள்.

"இவங்களை என்ன செய்யுறதுன்னு சொல்லுங்க" என்றார் சீனித்தேவர்.

"முதல்லே அவங்க கைக்கட்டை அவுத்துவிடுங்க" என்று உத்தரவிட்டார் பாண்டியன். கைக்கட்டு அவிழ்க்கப்பட்டது.

"நீங்க ரெண்டுபேரும் எந்த ஊரு?"

"பண்டாரக் குளம்."

"இங்கே எங்கே வந்தீங்க?"

"சொள்ளமுத்துத் தேவரு வயலை வாங்கியிருக்கோம். புதூரிலே எங்க தங்கச்சி இருக்கா."

"நீர்பாய்ச்சிதான் தண்ணிபாய்ச்சணும்னு தெரியல்லே."

"தெரியுங்க... ஏதோ ஆத்திரத்திலே அடிச்சுப் போட்டோம். மன்னிச்சிடுங்க."

"ஆத்திரம் கண்ணை மறைக்கும். நீர்பாய்ச்சி இப்போ அடிபட்டுக்கிடக்கிறான். அவனுக்கு வைத்தியத்துக்கு வேண்டிய செலவுக்காக இரு நூறு ரூபாய் கொடுக்கணும்."

"கொடுத்திடறோங்க."

"அதுமட்டுமில்லே அவனாலே இப்போ வேலைக்கு வரமுடியாது. அவன் வேலைக்கு வார வரைக்கும் நீர்ப்பாய்ச்சித் தொழிலை நீங்கதான் செய்யணும்."

"அதை எப்படிங்க செய்யறது. எங்க ஜாதியிலே அதைச் செய்யலாமுங்களா?"

"உங்க வயலுக்குத் தண்ணி பாய்ச்ச மட்டும் பம்ப்செட்டைத் தூக்கிட்டுப் போகலாம். அப்போ அது உசந்த தொழில். அடுத்தவன் வயலுக்குத் தண்ணி பாய்ச்சினா அது தாழ்ந்த தொழில் அப்படித்தானே?"

"என்னத்த இருந்தாலும் அண்ணாவி இப்படித் தண்டனை கொடுக்கப்படாது" என்றார் கருப்பசாமித்தேவர்.

"கருப்பசாமி, நீங்க எல்லோரும் இதிலே ஒண்ணு சேர்ந்திட்டீங்க. இனிமே நான் ஒண்ணும் சொல்ல விரும்பலே- நாளையிலிருந்து மாடன் வேலைக்கு வார வரைக்கும் நானே அந்த வேலையைச் செய்யறேன்."

"அண்ணாவி, நீங்களா?" என்றார் சீனித்தேவர். அவர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்தாற்போல் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஏன் நான் செய்யக்கூடாதா? இந்தச் சிலம்படிக்கிறது எங்க ஜாதித் தொழிலா? அதை நான் செய்யலே. அதை மாதிரித்தான் 'நீரும்..., வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'னு வள்ளலார் பாடியிருக்கார். வாடுகிற பயிருக்குத் தண்ணி பாய்ச்சறதும் ஒரு புனிதமான தொழில்தான்" என்றார் பாண்டியன்.

"அண்ணாவி, நாங்க அதை எப்படியாவது சமாளிச்சுக்கிறோம். இவங்களை இந்த ஒரு தடவை மன்னிச்சு விட்டுடலாம்" என்றார் கருப்பசாமி.

"அப்படியே செய்யுங்க" என்றார் பாண்டியன். கூட்டம் கலைந்து சென்றது.

ராமசந்திரனும் பாண்டியனும் செவக்காட்டை நோக்கி நடையைக் கட்டினார்கள். போகிற வழியிலே மாரியம்மன் கோயில். அதன் கிழக்குப் புறம் வேப்ப மரத்தோப்பு. வேப்பந்தோப்பு நடுவிலே ஒரு கிணறு. அந்த கிணத்துக்குப் பக்கத்திலே ஒர் உருண்டையான கல். அந்தக் கல் குறைஞ்சது இரண்டடி விட்டம் இருக்கும்.

ராமசந்திரனைக் கூட்டிக்கொண்டு போய் அந்தக் கல்லைக் காட்டினார் பாண்டியன்.

"ராமசந்திரா, இந்தக் கல்லை முன்னாலே பார்த்திருக்கியா?"

"ஓ, இது இளவட்டக் கல்தானே! அந்தக் காலத்திலே இதைப் பயில்வான் பால் பாண்டியன் தூக்கிப் போட்டுப் பாத்திருக்கேன்."

"முன்னாலேல்லாம் இந்தக் கல்லைத் தலைக்கு மேலே தூக்கிப் பின்பக்கமா கீழே போடறவங்கதான் கல்யாணம் பண்றதுக்குத் தகுதியுள்ளவங்களாம். அந்தக் காலத்திலே இப்படித்தான் இந்த ஊரிலே கல்யாணம் நடந்திருக்கு. கொஞ்சம் தூக்கிப் பாக்கிறயா?" என்றார் பாண்டியன்.

"வேண்டாம்ப்பா-இதை நம்மாலே தூக்க முடியாது. எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுத்து இனிமே நான் ஏன் தூக்கணும். அதுமட்டுமில்லே-இதைத் தூக்கிப் போட்டாத்தான் கல்யாணம்னு ஒருத்தருக்கும் இந்த ஊரிலே கல்யாணமே நடக்காது!"

"அப்படியா சொல்றே" என்று சொல்லிக் கொண்டே கீழே குனிந்தார் பாண்டியன். கல்லை புரட்டினார். கண்மூடி கண் திறப்பதற்குள் கல்லைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தார். பிறகு பின்புறமாகக் கீழே போட்டார்.

இளையோர் மேடை

பட்டி மன்றங்கள் தேவையா?

பட்டி மன்றங்கள் அவசியமானவை இலக்கிய, மொழி வளர்ச்சிக்குப் பட்டி மன்றங்கள் உறுதுணையாக நிற்கின்றன.

தமிழ் மொழியில் மட்டும்தான் பட்டி மன்றங்கள் இருக்கின்றன. முன்னேறிய

குமாரி எல். ஆர். சுமதி

குமாரி மங்கையர்க்கரசி

நாடுகளில் எங்கும் பட்டி மன்றங்களைக் காணமுடியாது. மூன்று மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று வெறும் பேச்சுக்குப் பிரிட்டன், அமெரிக்கா ரஷ்யா போன்ற நாட்டு மக்கள் செல வழிக்க மாட்டார்கள்.

இலக்கியத்தைவிட சொந்தக் கதைகளும், பத்திரிகைகளில் வெளியாகும் நகைச்சுவைத் துணுக்குகளும், சில சமயங்களில் மிமிக்கிரியும் கூட இன்றைய பட்டிமன்றங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

பட்டி மன்றங்களால் Leader Ship அதாவது ஒரு தலைவனுக்கு உரிய குணம் கிடைக்கிறது.

உரையாடலில் கலந்து கொண்டவர்கள்

- குமாரி எல். ஆர். சுமதி (சட்டக்கல்லூரி மாணவி)
- குமாரி மங்கையர்க்கரசி எம்.ஏ, எம்.பில். (சென்னைப் பல்கலை கழகத் தமிழ்த் துறை ஆராய்ச்சி மாணவி)
- திரு குமரன் (அஞ்சல்வழி கல்வித்துறை மாணவர்)
- திரு அனந்த நாராயணன் எம். ஏ, எம்.பில் (சென்னைபல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை ஆராய்ச்சி மாணவர்)
- திரு சுப்பிரமணியன் எம்.காம். (பேராசிரியர் சதக் அப்துல்லா கல்லூரி, பாளையம்கோட்டை)

சுமதி: பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் போன்றவை தேவையான ஒன்றுதான். பட்டி மன்றங்கள் வழக்காடு மன்றங்கள் இவற்றால் இலக்கியம் வளர்ந்திருக்கிறது, வாழ்ந்து கொண்டு இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

→

''சீனு, நீ ஒருத்தன் தான் கல்யாணம் செய்து கொள்ளத் தகுதி உள்ளவன்'' என்று சொல்லிச் சிரித்தார் ராமசந்திரன். நண்பர்கள் இருவரும் செவக்காட்டை நோக்கி நடந்தார்கள்.

3

அக்ரஹாரத்தில் சங்கர நாராயணய்யர் வீட்டுத் திண்ணையில் சுப்பிரமணிய அய்யர், சவுடால் சாமிநாதய்யர், சமையல் அய்யாவய்யர், பட்டாளம் பரமேச்வரய்யர் ஆகியோர் உட்கார்ந்து காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பட்டாளம் பரமேசுவரய்யர் யுத்த காயம் பட்டவர். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜப்பானோடு சண்டை போட்டதில் குண்டு விரலிலே குண்டுச் சிதறல் பட்டதனாலே சுண்டுவிரல் துண்டு பட்டுவிட்டது. அந்த விரல் புண்ணை அவர் காட்டிக் காட்டிப் பேசும் போது வேடிக்கையாக இருக்கும். தான்தான் பெரிய தியாகி என்று அவருக்கு எண்ணம். பட்டாளத்து வீரர் என்று தன்னைச் சொல்லிக்கொள்வதிலே அவருக்கு அளவு கடந்த பெருமை. அன்று அந்தத் திண்ணை மேடையில் பாப்பாரப் பாண்டியனைப் பற்றிப் பேச்சு நடந்தது.

''இந்த வருஷம் மழை ரொம்பக் குறைச்சல். குளத்திலே இருக்கிற தண்ணீர் இன்னும் ஒரு மாசத்துக்குத்தான் வரும்போலத் தெரிகிறது'' என்றார் சுப்பிரமணிய அய்யர்.

''மனுஷான் ஆசாரம் தப்பினா அப்படித்தான் ஓய் ஆகும். தர்ப்பை பிடிக்கிறவன் எல்லாம் துடுப்பை எடுத்தான்னா அப்படித்தான் ஆகும்'' என்றார் சமையல் அய்யாவய்யர்.

''தர்ப்பை பிடிக்கிறவன் துரணியைப் பிடிக்கலாமாக்கும்?'' என்று அய்யாவய்யருக்குச் சாட்டையடி கொடுத்தார் பட்டாளம் பரமேசுவரய்யர்.

''உண்மைதான் முதல்லே சொல்லணும். நீர் தான் இந்த ஊர்லே குல ஆசாரத்தை விட்டுக் கடல் கடந்து பிரயாணம் பண்ணினவர். பிராயச்சித்தம் கூடச் செய்துக்காதவர்'' என்று சாடினார் அய்யாவய்யர்.

''அவர் எதுக்குன்னுதான் பிராயச்சித்தம் பண்ணிக்குவார்? கடல் கடந்து போனதுக்கா, கண்டமாமிசம் சாப்பிட்டதுக்கா, எதை எதையோ குடிச்சதுக்கா, எப்படி எப்படியோ இருந்ததுக்கா?'' என்றார் சவுடால் சாமிநாதய்யர்.

''நீங்களெல்லாம் இமயமலைப் பிரதேசத்திலே அந்தக் குளிரிலே நடுங்கியிருந்தாத் தெரியும். அந்தப் பக்கத்து ஆசாரம் அதெல்லாம் சாப்பிட்டுத்தான் ஆகணும். சாப்பிடலேன்னாத் தாக்குப்பிடிக்க முடியாது'' என்றார் பரமேசுவரய்யர்.

''அதுசரி ஓய், இந்த ஊருக்கு வந்ததுக்கப்புறமும் ஏன் கண்டதெல்லாம் குடிக்கிறீர்'' என்றார் சவுடால்.

''உம்மாலே வெத்திலைப் பாக்குப் போடாம இருக்க முடியுதா? அதை மாதிரித்தான் இதுவும். ஆரம்பிச்சா விடமுடியாது. என்னவெல்லாமோ குத்தம் சொல்றேளே! என் கையைப் பாரும் ஓய்! இந்த நாட்டுக்காக என் சுண்டு விரலையே இழந்திருக்கேன். என்னுடைய தியாகத்தைப் புரிஞ்சுக்காமப் பேசறேளே'' என்றார் பட்டாளம்.

''நாம இப்போப் பேச வந்தது பாப்பாரப்பாண்டியனைப் பத்தி. நமக்குள்ளே ஏன் சண்டை போடணும். தீர்ப்பாச்சி குடும்பனுக்குச் சிலம்பாட்டம் சொல்லிக்

அனந்த நாராயணன்: நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. பட்டி மன்றங்களால் இலக்கியம் வளர்ந்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல. சொல்லப் போனால் பட்டி மன்றங்களால் இலக்கியங்கள் கேலிக் கூத்தாக்கப்பட்டு இருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். உதாரணத்திற்குப் பட்டி மன்றங்களுடைய தலைப்புக்களையே எடுத்துக் கொள்ளுங்கள் கற்பில் சிறந்தவள் சீதையா? கண்ணகியா?' சீதையின் கற்பையும் கண்ணகியின் கற்பையும் பற்றிப் பேச நாம் யார்?

குமரன்: சரியான கேள்விதான். இது போன்ற அர்த்தமற்ற தலைப்புக்களை விட்டு விட்டு சமூக பிரச்சனைகளைப் பற்றிப் பட்டி மன்றங்களில் அலசலாம் என்பது என் கருத்து. பொருளாதார பிரச்சனை, சமூகக் கொடுமைகள், அறிவியல் சம்பந்தமான விஷயங்கள் பட்டி மன்றத் தலைப்பு ஆகுமானால் அதை நான் வரவேற்கிறேன்.

மங்கையர்க்கரசி: அது போன்ற பட்டி மன்றங்களில் கூட பெரிதாக என்ன பயன் கிடைத்துவிடும் என்று நினைக்கிறீர்கள். சமூக பிரச்சனைகளோ விஞ்ஞான ஆய்வுகளோ வெறும் பட்டி மன்றங்களால் தீர்க்கக்கூடிய பிரச்சனை இல்லை. மனிதர்கள் சிந்தித்து உருவாக்க வேண்டிய பிரச்சனை.

சுமதி: மனிதர்களைச் சிந்திக்க வைக்கத்தானே பட்டி மன்றங்களை நடத்தப் படுகின்றன. வாலி வதையைப் பற்றி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் வகுப்பு எடுக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை யாரும் செவி சாய்த்துக் கேட்பதில்லை. பாதித் தமிழ் வகுப்புக்கள் காலியாகத் தான் இருக்கின்றன. ஆனால் இதே வாலிவதை விஷயத்தை விவாதமாக்கி பட்டி மன்றங்களாக போடுங்கள் எவ்வளவு கூட்டம் சேருகிறது என்று பாருங்கள்! பட்டி மன்றங்கள் விஷயத்தை படித்தவர்களிடம் மட்டும் எடுத்துச் செல்லாமல் படிக்காதவர்களிடம் கூட ஒரு புது லோகத்தைத் தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை உண்டு பண்ணுகிறது என்று தான்சொல்ல வேண்டும். கிராமங்களில் பட்டிமன்றங்களுக்கு எல்லாம் நிறைய கூட்டம் வருகிறது. கிராமத்து மக்களிடம் கூட இலக்கிய ஆர்வம் துளிர் விட ஆரம்பித்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் பட்டி மன்றங்கள் தாம்.

குமரன்: இன்றைய பட்டிமன்றங்கள் நிலையும் போக்கும் குறித்துச் சிந்தித்தால் அவை வியாபாரமாகிப் போய்



திரு குமரன்



திரு வி. எஸ். அனந்தநாராயணன்

திரு கே. சுப்ரமணியன்

கொடுக்கிறாராம். நம்ம ஆசாரமே கெட்டுப் போச்சு'' என்றார் சங்கரநாராயணய்யர்.

''சும்மா நாக்குமேலே பல்லைப் போட்டுண்டு பேசப்படாது. அவரை மாதிரி ஆசாரமா யாரு ஓய் இருக்கா? நீர் மூணு வேளையும் சந்தியா வந்தனம் பண்றீரா ஓய்? அவர் பண்றார். விஷ்ணுசகஸ்ரநாமம் அவர் சொன்னால் அந்த இடத்தைவிட்டு அசைய மனசு வராது'' என்றார் சுப்ரமணிய அய்யர்.

''நன்னாச் சொன்னீர் ஓய், பாப்பாரப்பாண்டியன் இந்த ஊரிலே இருக்கிறதுனாலேதான் ஊரிலே ஒரு களவுகூட நடக்கிறதில்லே. நமக்கெல்லாம் அவர்தான் பாதுகாப்பா இருக்கார்'' என்றார் சவடால். சவடாலுக்குப் பேசிக்கொண்டே, இருப்ப தென்றால் மகிழ்ச்சி.

''இன்னொண்ணு தெரியுமோ, அவாத்துக்குக் கொஞ்ச நாளைக்கு முன்னாலே கலெக்டர் வந்திருந்தாராம். அவர் இந்த ஊர்லே இருந்தவராமே. இவர் கிழிச்ச கோட்டை அவர் தாண்டுவதே இல்லையாம். நம்ம ஊரிலே சிமெண்ட் பாக்டரி வரப்போகுதாம்'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

''என்னத்த இருந்தாலும் நீர்ப்பாஞ்சிக்குச் சிலம்பாட்டம் சொல்லிக்குடுக்கிறது அடுக்காது'' என்றார் சங்கரநாராயணய்யர்.

''எல்லோரும் பேச்சை நிறுத்துங்கோ. அதோ பாப்பாரப் பாண்டியன் வரார்'' என்றார் சவடால்.

அந்தத் திண்ணையிலே ஒரு பரபரப்புத் தென்பட்டது. ஜமுக்காளத்தை எடுத்துப் போட்டார் ஒருவர். சீட்டுக் கட்டைக் கொண்டுவந்து கொடுத்தார் ஒருவர். சீட்டு ஆடுவது போல் எல்லாரும் நடித்தார்கள். பாப்பாரப் பாண்டியன் வயற்காட்டுக்குப் போக வேண்டுமென்றால் அந்தத் தெரு வழியாகத் தான் போக வேண்டும். அரட்டைக் கச்சேரி நடந்த வீட்டை நெருங்கினார் பாண்டியன்.

''என்ன ஓய் பாண்டியன் சௌக்கியமா? நீரும் ஒரு கை வரீரா'' என்றார் சவடால்.

''சாமிநாதா, சீட்டைச் சரியாகப் பிடிச்சுக்கோ'' என்றார் பாண்டியன்.

''நீர் பெரிய ஆள் ஓய்'' என்றார் சவடால்.

''நீங்கயெல்லாம் இவ்வளவு ஒத்துமையா இருக்கிறது எனக்கு சந்தோஷமா இருக்கு. எதிலாவது ஒண்ணுலே ஒத்துமையா இருந்தாச் சரி. என்னைப் பத்திப் பேசறதா இருந்தாக்கூட அதிலேயாவது ஒத்துமையா இருங்கோ'' என்று சொல்லி விட்டு நகர்ந்தார் பாண்டியன்.

ஒருவர் முகத்திலாவது ஈயாடவில்லை. ஜமுக்காளம் சுருட்டப்பட்டது. சீட்டாட்டம் கலைந்தது. மீண்டும் சகஜமாக தொடங்கியது.

குருவில்லாமல் சில கலைகளைக் கற்றுக் கொள்ள முடியாது. சிலம்பாட்டமும் அப்படித்தான். சிலம்புக் கலைஞர்கள் தமது குருவை 'அண்ணாவி' என்றழைப்பதுண்டு. குருவின் மேல் தேவதா விசுவாசம் வைத்திருப்பார்கள். ஒவ்வொரு வருடமும் தீபாவளி சமயத்தில் குருவுக்கு வேஷ்டி துண்டு, வாங்கிக் கொடுக்காமல் இருக்கமாட்டார்கள். அதிலே சீடர்களுக்குள் போட்டா போட்டி. உயர்தரமான ஆடை வாங்கிக் காணிக்கையாகக் கொடுப்பார்கள். பாப்பாரப் பாண்டியன் இந்த மரியாதையை மட்டும் மறுப்பதில்லை.

அன்று தீபாவளி. வழக்கமாக ஜரிகை வேஷ்டி கட்டி அங்கவஸ்திரம் அணிந்திருக்கும் பாப்பாரப் பாண்டியன் அன்று ஒத்தக்கரை கைத்தறி வேஷ்டியும் முரட்டுத் துண்டும் அணிந்திருந்தார். சீடர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து மயிற்கண் வேஷ்டி, ஜரிகை வேஷ்டி என்று காணிக்கை செலுத்தினார்கள்.

சிட்ட வேதனை புலப்படும். இலக்கியத்தைப் பாமர மக்களிடம் கொண்டு போக வேண்டும் என்ற நோக்கத்துடன் பட்டி மன்றங்கள் முன்பு நடத்தப்பட்டன. ஆனால் இன்று இலக்கியத்தை விட சொந்தக் கதைகளும், பத்திரிகைகளில் வெளியாகும் நகைச்சுவைத் துணுக்குகளும் சில சமயம் மிமிக்கிரியும் கூட இன்றைய பட்டி மன்றங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன....

அனந்த நாராயணன்: இது வேதனை தரக்கூடிய விஷயம்தான். என்னைக் கேட்டால் இன்னும் நான் கடுமையாகப் பட்டி மன்றங்களை ஆட்சேபிக்கிறேன். ஒரு பட்டி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் தலைப்புக்களில் தீர்ப்பு வழங்கப்படுகிறது. இந்தத் தீர்ப்பு இடத்துக்கு இடம், நீதிபதிகளுக்கு நீதிபதி கூட மாறுபடுகின்ற விஷயத்தைக் கவனிக்க வேண்டும். ராஜபாளையத்தில் கண்ணகியை விட சீதைதான் கற்புடையவள் என்று தீர்ப்பாகும். ஆனால் அதே சமயம் பாண்டிச்சேரியில் இந்தத் தீர்ப்பே மாறிப் போகும். இதனால் என்ன பயன்?

சுப்பிரமணியம்: நண்பரின் கேள்வி அழகாக இருக்கிறது. சில வழக்குகளில் கூட தீர்ப்பு கோர்ட்டுக்கு கோர்ட், வாதியின் பிரதிவாதங்களை வைத்து மாறும் போது பட்டி மன்றங்களில் மாறினால் என்ன என்பது தான் என் எண்ணம்; ஆனால் தலைப்பை எடுத்துக் கொள்ளும் போது ஓரளவு தரக் கிரமத்தோடு இருக்க வேண்டியதும் அவசியம். அதற்கென்று ஒரேயடியாக பட்டி மன்றங்களே வேண்டாதவை என்று சொல்லப்படுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று இளைஞர்கள் நிறைய பட்டி மன்றங்களில் கலந்து கொள்கின்றனர். பட்டி மன்றங்களில் வாதம் புரிவதனால் அவர்களுக்கு நல்ல பயிற்சியும், பயப்படாத ஒரு தன்மையும், விவாதத் திறமையும் ஏற்படுகின்றன. சொல்லப்போனால் அதாவது ஒரு தலைவனுக்கு உரிய குணம் கூட கிடைக்கிறது என்று சொல்லலாம். பட்டம் பெற்று வேலைக்குச் செல்லும் போது தான் அந்தத் தொழிலைப் பற்றி விவாதிக்கவும், முடிவு எடுக்கக்கூடிய ஒரு தன்மையும் இளைஞர்கள் இயல்பாகப் பெறுகிறார்கள் என்றால் அதற்குப் பட்டி மன்றப் பேச்சும் ஒரு காரணம் தான்.

மங்கையர்க்கரசி: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பட்டி மன்றங்கள் அறிவுக்கு முதலிடம் தருபவை என்று சொல்வது போல் அல்லவா இருக்கிறது? நீங்கள் பட்டி மன்றங்களில் பேசி இருக்கிறீர்களா?

சுப்பிரமணியன்: பேசவில்லை. பேசப் போவதும் இல்லை. ஆனால் நிறைய பட்டி மன்றங்களை, அதில் கலந்து கொண்டு இளைஞர்களை உன்னிப்பாக கவனித்து இருக்கிறேன். அதனால் தான் சொல்கிறேன் பட்டி மன்றங்கள் பிரயோஜனமானவை என்று.

மங்கையர்க்கரசி: பட்டிமன்றங்களில் உணர்ச்சிக்குத்தான் அதிகம் இடம் கொடுக்கிறார்களே தவிர அறிவுக்கு இல்லை என்பது என் வாதம். பட்டி மன்றத்தில் வாதாடுகிறவர்கள் எல்லோரும் காப்பியங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் இல்லை. எதிர் கட்சிக்காரர்களுக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்ற நினைப்பில் குதர்க்க வாதம் புரியும் போலி வேடதாரிகள்.

சுமதி: அப்படி எல்லோரையும் சொல்ல முடியாது. ஒரு காப்பியத்தில் இருந்து பொருள் கிடைத்ததும் அதனை நன்கு உணர்ந்து கொண்ட பின்புதான், அந்தக் காப்பியத்தை ஆய்ந்து படித்து விட்டுத்தான் பட்டி மன்றங்கள் ஏறுகிறார்கள். இலக்கியங்கள் ஊற்று மாதிரியானவை. அவற்றைத் தோண்டத் தோண்டத்தான் சுரக்கும். புதிய →

"அண்ணாவி, ஜரிகை வேஷ்டி ஏதாவது கட்டிக்குங்க. இந்த முரட்டுத் துணியிலே உங்களைப் பார்க்கறது என்னவோ போல இருக்கு" என்றார் சண்முகத் தேவர்.

"சண்முகம், இது நம்ம புது சிஷ்யன் கொடுத்தது. நேத்து சாயங்காலமே கொடுத்துட்டுப் போயிட்டான். புது சிஷ்யன் யாரு தெரியுமில்லே- நம்ம நீர்பாய்ச்சி மாடனைத்தான் சொல்றேன்" என்றார் பாண்டியன்.

அவருடைய சீடர்களுக்கு அவர் சொன்னது அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது அவர்களுடைய முகக் குறிப்பிலிருந்துத் தெரிந்தது.

"அண்ணாவி, மாடனுக்கு எல்லாப் பிடிகளையும் சொல்லிக் கொடுக்கிறீங்களா இல்லே?" என்றார் மாயாண்டி.

"ஆமாம்!"

"எங்களுக்குச் சில பிடிகளைப் பிடிக்கவச்சிட்டுத் தானே சொல்லிக் குடுத்தீங்க" கருப்பசாமி அங்கலாய்த்தார்.

"நீங்களும் கத்துக்கலாம்!"

"எப்போ?"

"காலம் வரும். நான் ஒரு காரணமாத்தான் இப்பச் சொல்லிக் கொடுக்கலே. சரி, சரி, எல்லோரும் சாப்பிட வாருங்க" என்றார் பாண்டியன்.

வருடா வருடம் தீபாவளியன்று அவர்களுக்கெல்லாம் அவர் வீட்டில்தான் சாப்பாடு. இவர் வீட்டில் தீபாவளியன்று சாப்பிடுவதற்காகவே முதல் நாளன்றே அவரவர் வீட்டில் 'அசைவ உணவு' சாப்பிட்டு விடுவார்கள். தனியாக சமையல்காரர் போட்டுப் பார்த்துப் பார்த்துச் சமையல் வகைகள் செய்து வைத்திருப்பார் பாண்டியன். சீடர்கள் சாப்பிடுவதைப் பார்க்கும் போது அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, தானே பசியாறுவார்.

சீடர்களுக்கும் அண்ணாவியிடம் அலாதி மரியாதை. அன்று மாடனைத் தவிர எல்லாச் சீடர்களும் அங்கிருந்தார்கள். மாடன் வந்தால் இவர்கள் வரமாட்டார்கள்.

மாடனுக்குத் தனியாகச் சாப்பாடு காரியரில் அவன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது.

4

பத்தாண்டுகள் ஓடிவிட்டன. ஊரை விட்டு வந்தபிறகு பாண்டியன் எத்தனையோ மாற்றங்களைப் பார்த்தாகிவிட்டது. மகனுக்கு வேலை கிடைத்தவுடன் அவனோடு அவரும் சென்றுவிட்டார். ஊட்டியில் ஒரு தேயிலைத் தொழிலகத்தில் அவனுக்கு வேலை. ஊட்டியினுடைய தட்ப வெப்பநிலை அவருக்கு இதமாகத்தான் இருந்தது. சிவூரில் அவருடைய வீட்டில் அவருடைய சகோதரி குடியிருந்தாள். ஊட்டியில் பாப்பாரப் பாண்டியன் என்றால் யாருக்கும் தெரியாது. அவர் பழையபடி சிவசாமியர் ஆகிவிட்டார். எப்போதாவது வீட்டுத் தோட்டத்தில் கம்பெடுத்துச் சுற்றுவார். அவரோடு அவர் குரு கொடுத்திருந்த ஓலைச்சுவடிகளையும் கொண்டுவந்திருந்தார். அவற்றை எடுத்து எப்போதாவது படிப்பார். புதிது புதிதாக சில ஆராய்ச்சிகள் செய்வார். மற்றப்படி அவருடைய பொழுது மிக அமைதியாகப் போய்க்கொண்டிருந்தது.

ஒருசமயம் சிவூரிலிருந்து பட்டாளம் பரமேச்வர ஐயர் ஊட்டிக்கு வந்திருந்தார். பொட்டானிகல் கார்டனில் தற்செயலாகப் பாப்பாரப்பாண்டியனை அவர் சந்திக்க நேர்ந்தது. ஊரைவிட்டுப் பாண்டியன் வந்த பிறகு திருட்டு, களவு அதிகமாகிவிட்டதாம். ஊருக்கு

புதிய கருத்துக்கள் பட்டி மன்றங்களால்தான் கிடைக்கின்றன. பட்டி மன்றம் என்ற கலை இன்று தோன்றிய கலை அன்று. அது காலம் காலமாய் இருந்து வருகிறது.

அனந்த நாராயணன்: காலம் காலமாய் இருந்து வருவதாகச் சொல்கிறீர்கள். தமிழில் தான் பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள் போன்றவை எல்லாம் இருக்கின்றன. மலையாளத்திலோ, கன்னடத்திலோ, சமஸ்கிருதத்திலோ பட்டி மன்றங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆங்கில மொழி பேசுகிறவர்கள் பட்டி மன்றம் என்ற ஒன்றையே கேள்விப் பட்டு இருக்க மாட்டார்கள். இன்று உலகத்தில் வளர்ந்து இருக்கிற நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாட்டவர்கள் இது போன்ற பைத்தியக்காரத்தனத்தை எல்லாம் செய்யாது, மூன்று மணி நேரம் இரண்டு மணிநேரம் என்று வெறும் பேச்சுக்கு நாட்டு மக்கள் நேரத்தைச் செலவிட மாட்டார்கள்.

சுப்பிரமணியம்: வாதங்கள் தான் ஆனால் சமஸ்கிருத மொழியில 'தர்க்' என்ற ஒன்று உண்டு. இதில் கூட வாதப் பிரதிவாதங்கள் உண்டு. ஆங்கில மொழியிலும் விவாதங்கள் உண்டு. இவை பட்டி மன்ற பாணியில் இல்லாமல் இருக்கலாமே தவிர அதற்கென்று விவாதமே இல்லாமல் எந்த மொழி இலக்கியமும் வளர்ந்ததில்லை.

மங்கையர்க்கரசி: விவாதம், ஆய்வுக் கூட்டங்கள் இவை எல்லாவற்றையும் நாம் பட்டி மன்றங்களோடு சம்பந்தப்படுத்தக் கூடாது. மன்றமும் ஒரு கலை. 'லாவணி' என்கிற கிராமப் புறத்துப் பட்டி மன்றம் விடிய விடிய நடக்கும். பட்டி மன்றங்கள் அவசியமானவை தான். ஆனால் அவை இன்று தனி வெறுப்பு விருப்புக்களாக மாறியிருப்பதை நான் ஆட்சேபிக்கிறேன்.

அனந்த நாராயணன்: 'தர்க்' கூட மொழியில் விவாதிக்கப்படும் பட்டி மன்றங்களால் கூட பயன் இல்லை என்பதுதான் என் வாதம். ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்பட வேண்டியவை பட்டி மன்றங்கள். வேடிக்கை பார்க்க வழக்காடு மன்றத்திற்குக் கூட்டம் சேருகிறதே தவிர விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள இல்லை.

சுப்பிரமணியன்: பட்டி மன்றம் ஒரு கலை வடிவம். இளைஞர்களுக்குத் தேவையான ஒன்று. மொழி அறிவு இலக்கிய அறிவு, புலமை போன்றவை பட்டி மன்றங்களால் மேன்மை பெறுகின்றன. இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

சுமதி: மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியைக் கடந்த கால கட்டங்களில் பட்டி மன்றங்கள் உண்டாக்கி இருக்கின்றன என்பது நிதர்சன உண்மை. இன்று பல இளைஞர்கள் நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்து இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணமே பட்டி மன்றங்கள்தாம். மொழி உணர்வு கூட பட்டி மன்றங்களால் வளர்ந்தே இருக்கிறது. மனித வாழ்க்கையோடு மனித இன கலாச்சாரத்தோடு கலைகளோடு சம்பந்தப்பட்டக் கருத்துக்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள காப்பியங்கள் பட்டி மன்றங்களில் விவாதிக்கப்படுவதால் பட்டி மன்றங்களால் சமுதாயத்திற்குப் பயன் உண்டு. ●

அமைப்பு: கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன்

ஒருமுறையாவது போய்விட்டுவர வேண்டும் என்று நினைத்தார் பாண்டியன். வேளை கூடி வரவில்லை.

ஒரு நாள் மாலை அவருடைய மகன் விஸ்வநாதன் வெட்கித் தயங்கித் தந்தையிடம் வந்தான்.

''அப்பா, எங்க தொழிற்சாலையிலே உள்ள ரிக்ரியேஷன் கிளப்புக்கும் கோயம்புத்தூர் பாக்டரி ஒன்றின் ரிக்ரியேஷன் கிளப்புக்கும் போட்டி. இந்த மாதம் இரண்டாம் தேதி நடக்குது. இதிலே எல்லாவிதமான விளையாட்டும் இருக்கு. போட்டிகளில் தொழிலாளிகளின் சொந்தக்காரர்களும் கலந்து கொள்ளலாம். சிலம்புப் போட்டியிலே நீங்க கலந்துக்கணும்'' என்றான் விஸ்வநாதன்.

''இதிலே பணம் எல்லாம் வசூலிப்பேளா?''

''பணம் வசூல் பண்றதெல்லாம் கிடையாது. எங்க தொழிற்சாலையே செலவு பண்றது.''

''இந்த வயசிலே என்னாலே ஆட முடியுமாடா?''

''அப்பா, உங்களாலே முடியலென்னு வேற யாராலே முடியும்?''

பல வருடங்களாக அவருடைய உள்ளத்தில் அடங்கிக் கிடந்த வீர உணர்ச்சி பொங்கி எழுந்தது. தோள்கள் திணவெடுத்தன. போர் வந்தது எனக் கேட்டவுடன் பொங்கி எழும் அந்தக்காலத்துப் போர் வீரனைப் போல அவருடைய கைகள் புடைத்தன. உள்ளங்கை பரபரத்தது.

''எதித்து யாரு ஆடப் போறாளாம்?''

''யாரோ பாப்பாதாஸாம். கோயம்புத்தூரிலே சிலம்பு கத்துக்கொடுக்கிறவராம்.''

''நல்லது. என்பேரை 'சிலம்பு சீனிவாசன்' அப்படின்னு போடச் சொல்லு.''

''சரிப்பா'' என்றான் விஸ்வநாதன்.

நோட்டீஸ் அச்சடித்து ஊட்டி முழுவதும் கொடுக்கப் பட்டது. 'சிலம்புச் சிங்கம் சீனிவாசனுக்கும், பாயும் புலி பாப்பாதாஸுக்கும் சிலம்புப் போட்டி.' என்று அச்சிடப்பட்டிருந்தது.

ஊட்டி மலையிலே வெம்மை தெரியாத கோடைக் காலம். பெரும்பாலான போட்டிகளில் ஊட்டி கிளப் வெற்றி பெற்றது. மாலை நான்கு மணிக்குச் சிலம்புப் போட்டி.

சிலம்பாட்டம் நடக்கப் போகும் அரங்கைச் சுற்றி ஒரே கூட்டம். கால்பந்து, கைப்பந்து என்று பலவகையான போட்டிகளைப் பார்த்திருக்கும் அந்த ஊர் மக்களுக்குச் சிலம்பாட்டப் போட்டி ஒரு புதுமையாகத் தெரிந்தது. ஊட்டி சீசனுக்காகப் பலர் வெளியூரிலிருந்து வந்திருந்தனர். அவர்களும் சிலம்பாட்டம் காண வந்திருந்தனர்.

ஆட்ட மைதானத்தில் பாப்பாதாஸ் நுழைந்து கையில் கம்பைப் பிடித்துச் சுழற்றினார். இரண்டு நிமிடம் கழித்துச் சிலம்புச் சிங்கம் சீனிவாசன் உள்ளே நுழைந்தார். அவரும் கையில் சிலம்புக் கம்பைச் சுழற்றி நின்றார். பாப்பாதாஸ் தலையை நிமிர்த்திப் பார்த்தார். அடுத்தகணம் பாப்பாரப் பாண்டியனின் காலில் நெடுஞ்சாண்கிடையாகக் கீழே விழுந்தார். கையிலிருந்த கம்பு கீழே விழுந்து கிடந்தது. பாப்பாரப் பாண்டியன் கீழே விழுந்துகிடந்த பாப்பாதாஸைத் தூக்கி நிற்கச் செய்தார். எதிரே நின்றவர் வேறு நீர்ப்பாய்ச்சிக் குடும்பன் மாடன். பாப்பாரப் பாண்டியன் தாசன் என்பதைக் குறிக்கப் பாப்பாதாஸ் என்று பெயர் வைத்துக்கொண்டிருந்தார். தனது சீடனைப் பார்த்ததில் பாண்டியனுக்கு ஒரு மகிழ்ச்சி.

வஞ்சகமில்லாமல் மாடனுக்கு எல்லாப் பிடியும் சொல்லிக் கொடுத்திருந்தார் பாண்டியன். அதையெல்லாம் மாடன் எப்படிப் பயன்படுத்தப் போகிறான் பார்க்கலாம் என்ற ஆசை.

''சாமி, என்னே மன்னிச்சிடுங்க. நீங்கதான் ஆடப்போறீங்கன்னு தெரிஞ்சா நான் இந்தப் போட்டிக்கு ஒத்துக்கிட்டிருக்கவே மாட்டேன்'' என்றார் மாடன்.

''அதுலே என்ன தப்பு? துரோணரும் அர்ஜுனனும் சண்டை போடலியா?'' என்றார் பாண்டியன்.

''என்னே மன்னிச்சிடுங்க சாமி, என்னாலே உங்களுக்கு எதிரா கம்பு தூக்க முடியாது?''

''மாடா, எப்போ போட்டின்னு வளேவுக்குள்ளே வந்துட்டோமோ போட்டிக் கட்டுத்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கணும். நான் கத்துக் கொடுத்ததை நீ ஒழுங்காகக் கத்துக்கிட்டிருக்கியான்னு பார்க்க வேண்டாமா? வேறு எங்கே உரசிப் பார்க்க முடியும்? வேறுயார் உன்னோடு போட்டி போட முடியும்?''

''அண்ணாவி, என்கை நடுங்குது.''

''மாடா, இந்தா. கம்பைப் பிடி. நீ வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.''

''இல்லே நான் தோத்துதான் போவேன்.''

''மாடா, நீ அப்படிச் சொல்லக் கூடாது. நீ கற்றுக்கொண்ட கலைக்கு ஒருநாளும் துரோகம் செய்யக்கூடாது. அதுமட்டுமில்லே. உன்னே நம்பி அழைச்சிக்கிட்டு வந்தவங்களே ஏமாத்தக் கூடாது. இங்கே ஆள் பெரிசில்லே. கலைதான் பெரிசு. நீ வெற்றிபெற்றால் என் சீடன் ஜெயிச்சாங்கறதிலே எனக்குச் சந்தோஷம். நான் ஜெயிச்சா இந்த வயசிலேயும் தாக்குப்பிடிக்க முடியுதேன்னு சந்தோஷம். எப்படிப் பார்த்தாலும் எனக்குச் சந்தோஷந்தான். தயங்காதே. வா—வா.. ஆடு'' என்றார் பாண்டியன்.

அவருடைய பெருந்தன்மையான பேச்சைக் கேட்டுக் கூட்டம் கை தட்டியது. ஒரு சிஷ்யப் போட்டியைப் பார்க்கப் போகிறோம் என்ற பரபரப்புக் கூட்டத்தில் தெரிந்தது.

கையில் கம்பை எடுத்தார் பாண்டியன்.

மாடனும் கையில் கம்பை எடுத்தார்.

மீண்டும் அண்ணாவியை முறைப்படி வணங்கினார். கம்புகள் சுழன்றன. எப்படிச் சுழன்றன என்றே எவருக்கும் தெரியவில்லை. மாடனின் திறமையை மனத்துக்குள் மெச்சிய படியே ஆடினார் பாண்டியன். கம்புகளின் மோதல் ஓசையும் காலடிகளின் தாள ஓசையும் ஒரு நியதியில் தாள லயத்தோடு அமைந்தன. பாண்டியன் சுற்றிச் சுற்றி வந்தார்.

பாப்பதாஸ் சுழன்று சுழன்று ஆடினார்.

இப்படிப்பட்ட போட்டி எவரும் கண்டதில்லை என்ற வகையில் அமைந்தது போட்டி.

பாப்பாதாஸ் சற்றே தள்ளாடினார். பாண்டியன் வேறொரு பிடிக்குத் தாவினார். காலில் புதிதாக வந்திருந்த பித்த வெடிப்புக்குள் மண் புகுந்து கொண்டு விட்டதால் பாண்டியன் சற்றே தடுமாறினார். விளைவு? பாப்பாதாஸின் கம்படி பாண்டியனின் தோளில் பலமாக இறங்கியது. சதை பிய்ந்து ரத்தம் கொட்டத் தொடங்கியது. பாண்டியன் கீழே சாயவில்லை. ஒருவாறு சமாளித்துக்கொண்டு நின்றார். பாப்பாதாஸ் தன் கையிலிருந்த கம்பைக் கீழே போட்டு விட்டு வந்து பாண்டியனின் காலடியில் விழுந்து கதறினார். பிறகு எழுந்து நின்று பாண்டியனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டார். அவருடைய ரத்தம் பாப்பாதாஸின் மாலையை நனைத்தது.

''மாடா, உனக்கு நினைவிருக்கா. முன்னாலே நீ ஒருநாள் அடிபட்டுக் கிடந்த போது உன்னைத் தூக்கி என்மேலெல்லாம் உன் ரத்தம். இன்னிக்கி உன்மார்பிலே என் ரத்தம். எப்படிப் பொருத்தம் பார்த்தியா?'' என்றார் பாண்டியன்.

''சாமி, என்னே மன்னிச்சிடுங்க. நான் மடையன். உங்களுக்கெதிராகக் கம்பெடுக்கலாமா? அண்ணாவியுடைய வார்த்தையைத் தட்டக் கூடாதன்னுதான் கம்பெடுத்தேன்'' என்று சொல்லிக் குலுங்கிக் குலுங்கி அழுதார் பாப்பாதாஸ்.

''மாடா. இன்னிக்கி எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?. நான் இனிமேல் சந்தோஷமாகச் சாகலாம். ஏன் தெரியுமா? என் கலை பரிபூரணமா உங்கிட்டே வந்துவிட்டது'' என்றார் பாண்டியன்.

''ஐயோ சாமி அப்படிச் சொல்லாதீங்க. இந்தப் பாவியை மன்னிச்சிடுங்க. உங்க தாஸன்னு பேரை வச்சுக்கிட்டே உங்களுக்கு வினையா வந்துட்டேனே.''

பாப்பாதாஸ் பேசிக் கொண்டே இருக்கும் போது பாண்டியனின் நினைவு தப்பியது. கீழே விழ இருந்த அவரைப் பாப்பாதாஸ் தாங்கிப் பிடித்துக் கொண்டார். உடனே அவரை ஒரு காரில் வைத்து மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்றார்கள். பாண்டியனின் மகன் வாய் ஓயாமல் மாடனைத் திட்டிக் கொண்டு வந்தான்.

இரத்தம் அதிக அளவுக்குப் போய்விட்டதால் பாண்டியன் மயங்கிய நிலையிலேயே இருந்தார். டாக்டர்கள் வந்து பரிசோதித்துப் பார்த்து அவருக்கு உடனடியாக இரத்தம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு டாக்டர் விஸ்வநாதனைப் பார்த்து, உறவினர்கள் யாராவது இரத்தம் கொடுக்க முடியுமா என்று கேட்டார். விஸ்வநாதனின் மனைவி தலை வலிப்பதாகச் சொல்லி வெளியே சென்று விட்டாள். தனக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தான் டைபாய்டு வந்ததாகவும் தன்னால் இரத்தம் கொடுக்க இயலாது என்றும் விஸ்வநாதன் சொன்னான். இவர்கள் சொன்னவை அனைத்தும் பாதி மயங்கிய நிலையில் இருந்த பாண்டியனின் காதில் விழுந்தன. இரத்தத்தைச் செலுத்தும்படியும் இரத்தத்திற்கான பணத்தைத் தாம் கொடுத்து விடுவதாகவும் விஸ்வநாதன் சொன்னான். இரத்தத்திற்கு இரத்தம் என்ற முறைதான் அங்குப் பின்பற்றப் படுவதாகவும் உடனடியாக இரத்தம் தேவை என்றும் டாக்டர் சொன்னார். விஸ்வநாதன் தன் மனைவியை ஆலோசனை கேட்பதற்காக வெளியேச் சென்றான்.

தன் இரத்தத்தைத் தாழ்ந்த ஜாதி ரத்தம் என்று விஸ்வநாதன் தடுத்து விடுவாரோ என்று தயங்கிய மாடன், விஸ்வநாதன் போன பிறகு மெதுவாக டாக்டரை அணுகித் தாம் இரத்தம் கொடுக்கலாமா என்று கேட்டார். டாக்டர் தாராளம் என்று சொன்னதன் பேரில் மாடனின் ரத்தம் எடுக்கப்பட்டது. மாடனின் இரத்தமும் பாண்டியனின் இரத்தமும் ஒரே குரூப்பாக இருந்ததால் மாடனின் இரத்தமே பாண்டியனுக்குச் செலுத்தப்பட்டது. முன்பு பாண்டியன் குங்குமம் பூசிக் கொண்டதாகச் சொன்னது மாடனுக்கு நினைவு வந்தது. இருவரின் இரத்தமும் ஒன்றாகக் கலந்துவிட்டன.

மறுநாள் காலை கண்விழித்துப் பார்த்தார் பாண்டியன்.

'உங்க உடம்பிலே செம்பு ரத்தம் ஓடுது'' என்றாள் நர்ஸ்.

பாண்டியன் புரியாமல் பார்த்தார்.

''நேற்று உங்களோடு போட்டியிட்ட பாப்பாதாஸ் தான் உங்களுக்கு இரத்தம் கொடுத்தார்'' என்றாள் நர்ஸ்.

மாடனின் அன்பை எண்ணிப் பூரித்துப் போனார் பாண்டியன். தன் மகனும் அவன் மனைவியும் இரத்தம் கொடுக்க இணங்காதது அவருக்கு மனத்தில் வருத்தத்தை அளித்திருந்தது. [illegible]

இப்படி நடந்திருந்தால் தனது பேரர்கள் எத்தனை பேர் இரத்தம் கொடுக்க முன் வந்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்த்தார். அவருக்குக் கோழூருக்குப் போக வேண்டும் என்ற ஆசை பிறந்தது. களைப்பினால் சற்றே கண்ணயர்ந்தார். கண் விழித்துப் பார்த்தபோது எதிரே மாடன் கண் கலங்கி நிற்பதைக் கண்டார்.

பாண்டியன் மாடனை நோக்கித் தமது இரு கரங்களையும் நீட்டினார். அவர் கையைத் தொடத் தயங்கினார் மாடன்.

''மாடா, உன் இரத்தம் தானே என் உடம்பில் ஓடுது. ஏன் தயங்கறே?'' என்றார். மாடன் ஆதரவாக அவர் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

''மாடா, என் பையன் எனக்கு இரத்தம் குடுக்கலே. நீதான் கொடுத்தே. நீதான்டா என்னுடைய மூத்தபிள்ளை'' என்று கண்ணீர் மல்கக் கூறினார் பாண்டியன். மாடன் அழுதார்.

''சாமி, என்னாலேதானே உங்களுக்கு இப்படி ஆச்சு. இந்தப் பாவத்தை நான் எப்படித் நீக்கப் போறேன்'' என்று கதறினார் மாடன்.

''மாடா, வீணா என் மனசை அலட்டிக்கறே. உன் கடமையை நீ செஞ்சே. எனக்கு மகிழ்ச்சியான வேலையை நீ செஞ்சே. போலியா ஆடாம நிஜமாவே ஆடினே. அது எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. இப்போ நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? ஒண்ணு கேக்க மறந்துட்டேனே. நீ கோயம்புத்தூருக்கு எப்ப வந்தே?''

''என் அண்ணாச்சி பையன் கோயம்புத்தூரிலே வேலை பார்க்கிறான், கோவையிலே நிறைய பேரு சிலம்பு கத்துக்க ஆசைப்படுறாங்க அங்க வந்துடுங்கன்னு அவன் சொன்னான். சாமி கோழூரை விட்டுப் போனப்புறம் அங்கே நிலைமை ரொம்ப மோசமாப் போயிடுச்சு. யாரும் யாரையும் மதிக்கிறதில்லே. எனக்கும் அந்த ஊரிலே இருக்கப்

பிடிக்கலே. அதுனாலே கோயம்புத்தூருக்குக் கிளம்பிட்டேன். கோவையிலே சிலம்பு கத்துக் குடுக்கிறதுக்காகப் பள்ளிக்கூடம் வச்சிருக்கேன். இலவசமாத்தான் கத்துக் கொடுக்கிறேன்'' என்றார் மாடன்.

''மாடா, நல்ல காரியம் செஞ்சிக்கிட்டிருக்கே. இப்ப எனக்கு ஊருக்குப் போகணும் போல ஆசை வந்திருக்கு'' என்றார் பாண்டியன்.

''சாமி உடம்பு கொணமாகட்டும். போவலாம்'' என்றார் மாடன்.

இரத்தம் செலுத்திய பிறகு உடல்நிலை தேறினாலும் பாண்டியன் மிகவும் மெலிந்து விட்டார். ஊருக்குப் போக வேண்டும் என்ற ஆசை அவரை உலுக்கி எடுக்கத் தொடங்கியது. மன நெருடு இருக்கவும் பிடிக்கவில்லை. மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு வந்த பிறகு ஊருக்குக் கிளம்ப ஆயத்தம் செய்யத் தொடங்கி விட்டார். பத்து நாட்களுக்குப் பிறகு ஊருக்குக் கிளம்பிவிட்டார். மாடனும் அவரோடு ஊருக்குக் கிளம்பினார். மறக்காமல் ஓலைச்சுவடிகள் அடங்கிய டிரங்க் பெட்டியையும் எடுத்துக் கொண்டார்.

5

ஊர் முன்பு போல் இல்லை. பாண்டியன் போனதும் அவரைப் பார்க்கப் பலர் வந்தார்கள். அவருடைய சீடர்கள் வந்தார்கள்.

''வளர்த்த கடா மார்பிலே பாஞ்சது போல அண்ணாவியை மாடன் அடிச்சுப்புட்டானுமே?'' என்றார் கருப்பசாமி.

பலரும் இதே கேள்வியைக் கேட்டார்கள். அவர்களின் இந்தப் போக்கே பாண்டியனுக்குப் பிடிக்கவில்லை.

''நாங்க மொரடங்கன்னு சொல்லி எல்லாப் பிடிகளையும் எங்களுக்குக் கத்துக் கொடுக்கமாட்டேன்னீங்க.. மாடனுக்குக் கத்துக் கொடுத்தீங்க.. இப்ப என்னாச்சி? மாடன் அண்ணாவியை அடிச்சுப் புட்டான்'' என்றார் மாயாண்டி.

''மாடன் நல்லவன். அவனைப் பத்தி என் எதிரிலே யாரும் குறை சொல்லப்படாது'' என்றார் பாண்டியன்.

''அண்ணாவி, உடம்பு தெம்பா இருக்கிற போதே எங்களுக்கு மத்தப் பிடிகளை எல்லாம் சொல்லிக் கொடுத்திடுங்க'' என்றார் சண்முகம்.

''இப்போ என்னாலே எழுந்து கம்பைப் பிடிக்க முடியாது. எல்லாப் பிடியையும் மாடனுக்குக் கத்துக் கொடுத்திருக்கேன். நீங்க அவனிடம் கத்துக்குங்க'' என்றார் பாண்டியன்.

''அண்ணாவி, என்ன ஒன்னும் தெரியாத மாதிரிப் பேசறீக. நாங்க போய் மாடன்கிட்ட கத்துக்கிட முடியுமா?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டார் மாயாண்டி.

''மாயாண்டி, கலைக்கு ஏது உயர்வு தாழ்வு? நான் கத்துக்கிட்ட குரு எந்த ஜாதின்னே எனக்குத் தெரியாது. கத்துக்கணும்னு உண்மையா ஆசை இருந்தா யாருட்டே வேணுமின்னாலும் கத்துக்கலாம். பள்ளிக் கூடத்திலேப் பசங்களைச் சேக்கறபோது வாத்தியாருடைய ஜாதியைப் பாத்தா சேக்கறீங்க. சிலம்பும் 'படிப்புதானே?'' என்றார் பாண்டியன்.

''அண்ணாவி, நடக்கறதைப் பேசுங்க. நாங்க வரோம்'' என்று சற்று உரக்கப் பேசிவிட்டுச் சென்றார் மாயாண்டி. மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

தன் சீடர்களுடைய நடத்தை அவருக்கு மன வருத்தத்தை அளித்தது. தான் சில முக்கிய பிடிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு சொல்லிக் கொடுத்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று என்பதை எண்ணிப் பார்த்தார். அவருடைய மன உளைச்சல் உடல் நிலையை மிகவும் பாதித்தது.

அக்ரஹாரத்துத் திண்ணைப் பேச்சாளர்களுக்கு அவல் கிடைத்தது.

''பாம்புன்னு தெரிஞ்சும் பாலை வார்க்கலாமோ?'' என்றார் சவடால்.

''எப்படி இருந்தவர் இப்படிப் போயிட்டார். சிங்கம் போல வருவாரே! இப்போ ரொம்ப தூரம் நடக்க முடியலையாமே'' என்றார் பட்டாளம்.

''முன்னாலே கையிலே கம்பைப் பிடிச்சுச் சுழற்றினார். இப்போவும் கையிலே கம்பைப் பிடிக்கிறார், ஊன்றிக்கிறதுக்காக'' என்று ஏதோ சிரிப்பு வெடியை உதிர்த்தது போலச் சிரித்தார் அப்பாவு.

''பாண்டியமாரெல்லாம் எல்லாப் பிடியையும் கத்துக் கொடுக்கலேங்களாம். இவர் மாடன் கிட்ட கத்துக்குங்கோன்னு சொல்லிட்டாராமே. கலிமுத்திப் போச்சு ஓய்'' என்றார் சங்கரய்யர்.

''அண்ணாவி அண்ணாவின்னு சிஷ்யர்களெல்லாம் இவரையே சுத்திண்டிருப்பாங்கள். இப்போ இவரைச் சீந்துறதில்லையாமே! எல்லாத்தையும் கத்துக் கொடுத்தா தலையிலே தூக்கி வச்சிண்டு கொண்டாடுவாளே! இந்தப் பிராமணனுக்கு ஏன் இப்படிப் புத்தி போச்சு?'' என்று கொட்டித் தீர்த்தார் சவடால்.

''இப்பத்தான் ஓய் அவரைப் பிராமணன்னு சொல்லிருக்கீர்'' என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்தார் அப்பாவு.

''மாடன் அவர் வீட்டுக்கு வந்திண்டு போயிண்டு இருக்கானுமோ?'' என்றார் சங்கரய்யர்.

''எல்லாம் இரகசியம். இவர் இந்த ஊருக்குத் திரும்பி வரணும்னு யாரு அழச்சண்டா'' என்றார் சவடால்.

முன்பெல்லாம் பாண்டியனின் காது கேட்க அவரைப் பற்றிப் பேசத் தயங்கியவர்களெல்லாம் அவர் காது கேட்கப் பேசத் தொடங்கினார்கள்.

உள்ள கவலை அதிகமாக இருந்த காரணத்தாலே அதன் மேல் விளைவாக உடல் நலத்தை மேலும் பாதித்தது. பாண்டியன் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. மாடனும் அவரும் வீட்டுத் தோட்டத்தில் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டார்கள். ஒருநாள் தான் பத்திரமாகப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்த ஓலைச்சுவடிகள் அடங்கிய ட்ரங்க் பெட்டியைக் கொண்டு வந்து மாடனிடம் கொடுத்தார்.

''மாடா, இதைப் பத்தி நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். என்னுடைய மற்ற ஆஸ்திகளை விட இதைத்தான் பெரிய ஆஸ்தியா மதிக்கிறேன். உனக்கு மத்த ஆஸ்திகளைக் கொடுக்க முடியாது. இந்த ஆஸ்தியை உனக்குக் கொடுக்கிறேன். இதைப் பத்திரமாப் பாதுகாக்க வேண்டியது உன்பொறுப்பு'' என்றார் பாண்டியன்.

தன்னுடைய கண்ணீரால் அந்தப் பெட்டிக்கு அபிஷேகம் செய்தார் மாடன்.

சிலம்பு பிடித்த கை ஒரு நாள் செயலிழந்து போயிற்று. மறுநாள் கால்களுக்கும் அந்தக் கதி. மூன்றாம் நாள் பாண்டியனின் தலை சாய்ந்தது. சிலம்புச் சிங்கம் விண்ணோடு சென்றது. உற்றார் உறவினர் வந்தார்கள். ஒப்புக்கு அழுதவர் பலர்.

உண்மையில் அழுதவர் சிலர். சிலர் கண்களில் கனிவு தெரிந்தது. சிலர் கண்களில் கண்ணீர் வழிந்தது. மாடனின் கண்கள் இரத்தம் சிந்தின.

அண்ணாவியினுடைய மரணம் பேர்களுக்கு வருத்தத்தை கொடுத்தது. பெரிய பெரிய மாலைகளாக வாங்கிப் போட்டார்கள்.

பாண்டியனின் பூத உடலைச் சிதையிலே கிடத்திப் பலர் வாய்க்கரிசி போட்டுவிட்டுச் சென்றார்கள். பாண்டியனின் மகன் தீ மூட்டினார். எல்லோரும் சென்று விட்ட பிறகு வெட்டியான் மட்டும் அங்கு இருந்தார். அவசரம் அவசரமாக மாடன் அங்கு வந்தார்.

"அண்ணாச்சி முகத்திலே தீ பிடிச்சிருச்சா?" என்றார் மாடன்.

"இன்னும் இல்லே. இதோ பாரு" என்றார் வெட்டியான்.

முகத்தைப் பார்த்துக் கதறினார் மாடன். சிதையைச் சுற்றி வலம் வந்தார்.

அன்று இரவில் அந்த இடத்தைவிட்டு அகல மறுத்துவிட்டார்.

பிணத்தில் கையில் மூட்டுத் தெறித்து கை மேலே எழுந்தது. வெட்டியான் கம்பைக் கையில் எடுத்து அந்தக் கையில் அடிகொடுக்கப் போனார். மாடன் தடுத்தார்.

"அண்ணாச்சி அந்தக் கையிலே அடிக்காதே! சிலம்பு பிடிச்ச அந்தக் கையிலே யாரும் அடிக்கக் கூடாது" என்றார் மாடன்.

"சுத்தப் பைத்தியமாயிருக்கியே மாடா நீ" என்றார் வெட்டியான்.

"அண்ணாச்சி, உனக்குத் தெரியாது. 'நீ தான்டா என்னுடைய மூத்த பிள்ளை' என்று என்னைப் பார்த்துச் சொன்னாரண்ணே—அவரைப் போல ஒரு ஆளைப் பார்க்க முடியுமா?"

"ஆமாம் சாமிக்கும் பெரிய மனசுதான்" என்றார் வெட்டியான்.

"மத்த ஐயமாரெல்லாம் என்னைத் தொடுவாகளா? இவரு என்னைத் தொட்டுத் தூக்கினாரண்ணாச்சி. எல்லாப் பிடியையும் சுத்துக் கொடுத்தாரு—நான் ஜெயிச்சேன்னு எவ்வளவு சந்தோஷப் பட்டாரு தெரியுமா? நான் ஜெயிச்சதனாலே தோத்துப் போயிட்டேன். . பாவி, நான்!" என்றார் மாடன்.

காலை ஐந்து மணி அளவில் உடல் முழுதும் எரிந்து சாம்பலாகி விட்டிருந்தது.

"அண்ணாச்சி, ஆஸ்தியை அடைபறவன் அஸ்தி கரைக்கணும்னு சொல்லுவாங்க. அண்ணாவி மகனுக்கு அவருடைய சொத்தெல்லாம் போவுது. அவரு அஸ்தி கரைப்பாரு. ஆனா அவருடைய பெரிய ஆஸ்தியை அவரு முழுசா எனக்குக் கொடுத்திட்டாரு. அது மட்டுமில்லாம 'என்னைத் தான் முதல் பிள்ளை' ன்னு சொல்லியிருக்காரு. அதனாலே நான் அஸ்தி கரைக்கப் போறேன். இதை யாருட்டேயும் சொல்லாதே அண்ணாச்சி" என்று கெஞ்சினார் மாடன்.

"சத்தியமாச் சொல்லமாட்டேன் மாடா" என்றார் வெட்டியான்.

மாடன் குளித்துவிட்டு வந்தார். கையிலே ஒரு பிடி அஸ்தியை அள்ளினார். பக்கத்திலிருந்த ஆற்றுக்குக் கொண்டு சென்றார். தண்ணீரில் கரைவதற்கு முன்னாலே அவர் கண்ணீரில் கரைந்தது அஸ்தி. ஆற்று நீரில் அதைக் கலந்தார். நீர் புனிதமடைந்ததாக அவருக்குத் தோன்றியது. அந்தப் புனித நீரில் மீண்டும் குளித்தார்.

தூரத்தே, ஸ்தாவர ஜங்கம ஆஸ்தியைப் பெறப் போகும் விஸ்வநாதன் உறவினர் புடைசூழ அஸ்தி கரைப்பதற்காக வந்து கொண்டிருந்தான்.

— முற்றும்

ஆசிரியர் "சிந்தாமணி"

K.R. கோவிந்தராஜ் அவர்களின்

ஜோதிட நூல்கள்

பதிப்புரிமை பெற்றது

1. சர்வார்த்த சிந்தாமணி(முதல் பாகம்) 6 00
2. சர்வார்த்த சிந்தாமணி (இரண்டாம் பாகம்) 6 00
3. ஜோதிட பாலபோதினி 6 00
4. லக்கின ஆராய்ச்சி-I (மேஷம் to கடகம்) 6 00
5. லக்கின ஆராய்ச்சி-II சிம்மம் to விருச்சிகம்) 6 00
6. லக்கின ஆராய்ச்சி-தனுசு 2 00
7. லக்கின ஆராய்ச்சி-மகரம் 2 00
8. லக்கின ஆராய்ச்சி-கும்பம் மீனம் (Each) 2 00
9. 12 மாதங்களில் பிறந்தவர்களின் அதிசயப் பலன்கள் (அச்சில்)
10. வாழ்க்கைத் துணைவி எவ்வாறு அமைவாள்? 2 00
11. கிரக அவஸ்தையும் பலாபலனும் 2 00
12. எண்ணின் பெருமையும் எண்ணின் பலனும் 2 00
13. பருவமடைதலும் திருமண தடைபெறுவதேன். 1 60
14. ஸ்ரீமத் நாராயணீயம் கைமேல் பலன் அளிக்கும் கண் கண்ட தெய்வமாம் ஸ்ரீகுருவாயூரப்பனின் லீலா வைபவம் (பாகவதச் சுருக்கம்) ஸமஸ்கிருதம்-தமிழ், தமிழுரையுடன் (2 பாகங்கள்) 46 00
15. கோடிக்கணக்கான பெண்மணிகளின் கண்ணீரைத் துடைத்து, நல்ல இல்வாழ்க்கைத் துணையை அடையவும், குடும்பத்தில் அமைதியும், சந்தோஷமும், சர்வ மங்களமும் பொங்க ஸ்ரீஸந்தோஷி மாதா (பூஜையும், கதையும்) கதையைப் படித்தும் பூஜித்தும் பயன் பெறுங்கள். 2 75
16. அர்ச்சிப்பதற்கு உகந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி தாமரைப்பூ செப்புக் காசு ஒன்று 3 00

மேற்கண்ட புத்தகங்களும் மற்ற எமது எல்லா விதமான தெய்வீக புத்தகங்களும் கிடைக்க உங்கள் அருகிலுள்ள புத்தக விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது விவரங்களடங்கிய கேட்லாக் இலவசமாகப் பெற எழுதுங்கள்.

தெய்வீக "காஸெட்டுகள்" விற்பனையும் உண்டு.

கிரி டிரேடிங் ஏஜென்ஸி

10, திரு கபாலீசுவரர் சந்நிதி தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004. போன்: 74876